கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-௫] பிலவங்க௵ சித்திரைமீ [பகுதி-௬

# அந்தாதிகள்.

அந்தாதி என்பது இறுதிமுதலாகத் தொடுப்பதாகும். அஃதாவது, பலவடிகளால் ஆயதோர் செய்யுளாயின், முன்னடியின் ஈற்றிலுள்ள எழுத்து, அசை, சீர் இவற்றிலொன்று வருமடியின் முதற்கண் வருதலும், முன்னடியேனும் முனடியிற்பெரும்பான்மையேனும் வருமடிமுதற்கண் வருதலும்; பலசெய்யுளான் ஆயதோர் நூலாயின், முற்செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்து, அசை, சீர், அடி இவற்றிலொன்று வருஞ்செய்யுளின் முதற்கண் வருதலுமாம். ஒரு செய்யுளகத்து அடிகள் இவ்வந்தாதியாற் றொடுக்கப்படின், அஃது அந்தாதித்தொடையெனப்படும். ஒருநூலகத்துச் செய்யுட்கள் இவ்வந்தாதியாற் றொடர்ந்துவரப்பெறின், அஃது அந்தாதித்தொடர்நிலையெனப்படும். இதனை அந்தாதித்தொகை என்றலும் உண்டு. இவ்வந்தாதிநூலெல்லாம் முற்செய்யுளினிறுதியும் வருஞ்செய்யுளின் முதலும் ஒன்றாய் வருதலேயன்றிப், பெரும்பாலும் நூலிறுதிச்செய்யுளினிறுதியும் நூன்முதற்செய்யுளின் முதலும் ஒன்றாகியும்வரும். அந்தாதித்தொடைச் செய்யுளும் அடிகளின் ஈறும் முதலும் ஒன்றாய் வருதலேயன்றிச் சிறுபான்மை அச்செய்யுளின் ஈறும் முதலும் ஒன்றாகியும் வரும். திருநூற்றந்தாதி முதலியன நூறுசெய்யுளும் அந்தாதியாகத் தொடர்ந்துவந்ததையேயன்றி, இறுதிச்செய்யுளின் இறுதியும் முதற்செய்யுளின் முதலும் முறையே ‘பூக்கொண்டதே’ ‘பூக்கொண்டு’ என ஒன்றாய் வந்ததனையும் நோக்கிக்கொள்க.

உலகுடன் விளக்கு மொளிகிளர் ரவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை

முக்குடை நீழற் பொற்புடை யாசன
மாசனத் திருந்த திருந்தொளி யறிவனை
யறிவுசே ருள்ளமொ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர தென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே"

இவ்வந்தாதித் தொடைச்செய்யுளிற் பலவடிகளும் ஈறும் முதலும் ஒன்றாய் வந்தனவேயன்றிச் செய்யுளின் ஈறும் முதலும் ஒன்றாய் வந்ததனையும் நோக்கிக்கொள்க. இவ்வந்தாதி, எழுத்து அசை சீர் அடி இவைபற்றி ஈறுமுதலாத் தொடுக்கப்பட்டவாறே, எழுத்தந்தாதி, அசையந்தாதி, சீரந்தாதி, அடியந்தாதி என நான்காக வகுக்கப்படும். "உலகுடன் விளக்கும்" என்னும் ஆசிரியத்துள் எழுத்தந்தாதி, அசையந்தாதி, சீரந்தாதி மூன்றும் வந்தன காண்க.

"ஆதியங் கடவுளை யருமறை பயந்தனை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கினை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கிய
சேதியஞ் செல்வநின் திருவடி பரவுதும்"

இதன்கண் அடியந்தாதி வந்தது. இவ்வாறே அந்தாதி நூலுள்ளும் எழுத்தசை சீரடிகள் அந்தாதியாகவருதல் ஆங்காங்குக் கண்டுகொள்க. திருவாய்மொழியில் "கண்ணன் கண்ணல்ல தில்லையோர் கண்ணே" என்னுஞ் செய்யுளீற்றடிப்பின் "ஏபாவம்பரமே யேழுலகும்" என வேறுசெய்யுண் முதலடிவந்தது எழுத்தந்தாதியாம். "தலையில் வணங்கவு மாங்கொலோ தையலார் முனபே" என்பதன்பின் 'பேய் முலை யுண்டு சகடம்பாய்ந்து மருதிடை' என வந்ததும் அது. அசையுஞ்சீரும் அந்தாதியாக வருவனவே, அந்நூலுள்ளும் பிற நூலுள்ளும் மிகப்பலவாம். பதிற்றுப்பத்து நான்காம்பத்தின்கணுள்ள ச, ரு, சு, ஆம் பாட்டுக்கள் அடியந்தாதியாற் றொடர்ந்து வந்தன.

இனி ஒரு செய்யுட்கண் இறுதியடியினிறுதியும் முதலடியின் முதலும் ஒன்றாய் வருவனவற்றை மண்டலவந்தாதியென்றும் அவ்வாறு வாராதவற்றைச் செந்நடையந்தாதியென்றும், பலவிரவி வருவனவற்றை மயக்கந்தாதியென்றும், எழுத்தசைசீர்களால் இடையிட்டு வருவனவற்றை இடையிட்டந்தாதி யென்றும், எழுத்தசை சீர்

களால் இடையிட்ட அடியந்தாதியை இடையிட்டடியந்தாதி யென்றுங்கூறி, அவை மண்டலவெழுத்தந்தாதி, செந்நடையெழுத்தந்தாதி, மண்டலவசையந்தாதி, செந்நடையசையந்தாதி, மண்டலச்சீரந்தாதி, செந்நடைச்சீரந்தாதி, மண்டலவடியந்தாதி, செந்நடையடியந்தாதி, மண்டலமயக்கந்தாதி, செந்நடைமயக்கந்தாதி, மண்டலவிடை யிட்டந்தாதி, செந்நடையிடையிட்டந்தாதி என விரிப்பாருமுளர். இவையன்றி மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடையந்தாதிகளும் கூறுவர். இவ்வந்தாதித்தொடை விகற்பமும் இவற்றிற்குதாரணமும் பிறவும் "ஈறு முதலாத் தொடுப்பதந் தாதியென், றோதினர் மாதோ வுணர்ந்திசி னோரே" என்னும் யாப்பருங்கலச் சூத்திரத்துக்குக் கூறிய விருத்தியுரையுட் கண்டுகொள்க.

மேலெடுத்தோதியவாறன்றி, இறுதிநின்ற சொற்பொருளேக்கத்தால் ஆகுபெயரால் அந்தாதியாக வருதலும் உண்டு. இதனை மாறனலங்கார வுரைகாரர் "இறுதிநின்ற சொற்பொருளேக்கத் தான் ஆகுபெயராற் சொற்றொடர் வருவனவுமுள. அதற்குச் செய்யுள்,

"பரிவதி லீசனைப் பாடி
விரிவது மேவ லுறுவீர்
பிரிவகை யின்றிநன் னீர்தூஉய்ப்
புரிவது வும்புகை பூவே"

"மதுமார் தண்ணந் துழாயான்
முதுவே தமுத லவனுக்
கெதுவே தென்பணி யென்ன
ததுவே யாட்செயு மீடே.'

இவை முதற்பத்தின் ஆறுந்திருவாய் மொழியின் முதற் பாட்டும் இரண்டாம் பாட்டும். இவற்றுட் பூ என்ற சொல்லின் பொருளேக் கத்தாற் சினையைக்கூற முதலை அறிவிக்கும் ஆகுபெயரால் அந்தாதித்தவாறு காண்க" எனக் கூறியவாற்றான் அறிந்து கொள்க. அந்தாதியை இயலிசையந்தாதி யெனவும், பொருளிசை யந்தாதி யெனவும் இரண்டாகப் பகுத்து, இத்திருவாய் மொழிகளைப் பொருளிசை யந்தாதி எனப்பணிப்பர் திருவாய்மொழியீட்டினரும்பத வுரையாளர்.

இவ்வாறு வரும் அந்தாதி விகற்பமெல்லாம் தொல்காப்பியனார் கூறிய இயைபு (செய்-உசக) என்பதன் வகையாய் அடங்கும். ஆண்

டுப் பேராசிரியர் "பொருட்டொடராகவும், சொற்றொடராகவுஞ்செய்வது இயைபு எனப்படும்" எனவும், 'சொற்றொடர் என்பது அந்தாதி எனப்படுவது' எனவும் கூறியவாற்றான் உணர்ந்துகொள்க. இக்கருத்தானே மாறனலங்காரமுடையாரும்,

சொல்லாற் பொருளாற் றொடருந் தொடர்நிலைக
ளெல்லா மவற்று ளெழுத்தசைசீர்—மல்கு
மடிசொற் றொடர்நிலைக ளந்த முதலாப்
படிவைத் தனர்முன் பகுத்து. (பொதுவியல். ௬)

என்பதனால் அந்தாதியினைச் சொற்றொடர்நிலை யென்று கூறினர். இங்ஙனம் அந்தாதியாக ஒரு செய்யுட் பலவடிகளையும் ஒரு நூலுட் பலசெய்யுட்களையும் தொடுப்பது தமிழிற் றொன்று தொட்டேயுள்ள பெருவழக்கமாம். இதனை யாப்பருங்கலவிருத்திகாரர் (௫௩.) 'பன்மணிமாலையும், மும்மணிக்கோவையும், உதயண குமாரன் கதையும் தேசிகமாலையும் முதலாகவுடைய செய்யுட்களுள் அந்தாதிவந்தவாறு காண்க" எனவும், (௫௩.) "இறுதியெழுத்துஞ்சொல்லும் இடையிட்டுத் தொடுத்த செய்யுளந்தாதி விகற்பம், உதயணன்கதையும் கலியாணகதையும் பன்மணிமாலையும் மும்மணிக்கோவையும் என்னுமிவற்றுட் கண்டுகொள்க" எனவும் கூறியதனானும், பேராசிரியர் "விருந்தேதானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" என்னுஞ் செய்யுளியற் சூத்திரவுரையில் "புதுவது கிளந்த யாப்பின் மேற்றென்றதென்னையெனின், புதிதாகத் தாம்வேண்டியவாற்றாற் பலசெய்யுளுந் தொடர்ந்துவரச்செய்வது; அது முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்யுளும் எனவுணர்க" எனவுரைத்ததனானும், பதிற்றுப்பத்தின்கட் காப்பியாற்றுக்காப்பியனார் பாடிய நான்காம்பத்து அந்தாதியாகத் தொடர்ந்து வந்ததனானும் அறிந்துகொள்க. பாட்டியலுடையார் கலம்பகம் பல்சந்தமாலை இணைமணிமாலை இரட்டைமணிமாலை மும்மணிமாலை நான்மணிமாலை மும்மணிக்கோவை வசந்தமாலை நவமணிமாலை கலியந்தாதி ஒலியந்தாதி பதிற்றந்தாதி நூற்றந்தாதிமுதலிய பல பிரபந்தங்களிற்செய்யுட்கள் அந்தாதியாகத் தொடர்ந்து வரப்பெறு மென்ப.

இவ்வந்தாதிச்செய்யுட்கள் ஏழுமுதல் ஆயிரம் இறுதியாகத்தொடர்ந்து வருவன எனவுணர்க. சடகோபர் திருவாசிரியம் ஏழுபாட்டு அந்தாதியாகவந்தது; திருவாசகத்துக் கோயிற்றிருப்பதிகம் கோயின் மூத்ததிருப்பதிகம் முதலாயின பத்துப் பத்துச்செய்யுட்கள் அந்தாதியாகத்தொடர்ந்தன. நீத்தல்விண்ணப்பம் ஐம்பது செய்யுட்களும் திருச்சதகம் நூறுசெய்யுட்களும் அந்தாதியாகத் தொடர்ந்தன. திருவாய்மொழி ஆயிரஞ்செய்யுள் அந்தாதியாக வந்தது. எல்லாப் பாக்களும் பாவினங்களும் இவ்வாறந்தாதியாற் றொடர்ந்து வரவும் பெறும். பாவும் பாவினமுங் கலந்து அந்தாதியாகத் தொடர்ந்தது கலம்பகத்துட்காண்க: பாக்களுள் வெண்பாவும் பாவினங்களுட் கலித்துறையும் அந்தாதியாற் றொடர்ந்து வந்தனவே மிகப்பலவாம்.

"வெண்பாக் கலித்துறை வேண்டிய பொருளிற்
பண்பா யுரைப்பதந் தாதித் தொகையே"

என்று பன்னிருபாட்டியலாருங்கூறுதல் காண்க. இதனைக் கபிலதேவர் பரணதேவர் நக்கீரதேவர் காரைக்காலம்மையார் பொய்கையார் பூதத்தார் பேயார் திருமழிசைப்பிரானார் சடகோபர் வெண்பாவந்தாதிகளானும்; திருவாதவூரர்நீத்தல்விண்ணப்பம், சடகோபர்திருவிருத்தம்,சேரமான் பெருமாணாயனார்பொன்வண்ணத்தந்தாதி, நம்பியாண்டார்நம்பி திருத்தொண்டர்திருவந்தாதி, திருவரங்கத்தமுதனார் இராமாநுசநூற்றந்தாதி,கம்பர் சடகோபரந்தாதிமுதலியகலித்துறை யந்தாதிகளானும் உணர்ந்து கொள்க.

இங்ஙனம்,

ரா. இராகவையங்கார்,

ஸேது ஸம்ஸ்தான வித்வான்.

## முத்துக்குமார கவிராசர்

# முத்தகத்திரயம்.

---

(முற்றொடர்.)

### கட்டளைக்கலிப்பா.

முடிவி லாதுறை சுன்னாகத் தான்வழி
    முந்தித் தாவடிக் கொக்குவின் மீதுவந்
தடைய வோர்பெண் கொடிகாமத் தாளசைத்
    தானைக் கோட்டை வெளிகட் டுடைவிட்டாள்
உடுவி லான்வரப் பன்னாலை யான்மிக
    உருத்த னன்கடம் புற்றமல் லாகத்துத்
தடையி லாதனை யென்று பலாலிகண்
    சார வந்தன ளோரிள வாலையே.

இது யாழ்ப்பாணத்திலே பிரசித்திபெற்ற மாவிட்டபுரக் கந்தசுவாமிகோவிலிலே ஒரு திருவிழாவிற் சென்று நின்றபோது முருகக்கடவுள் குதிரைவாகனத்திற் பவனிவருதலைக் கண்ட மாநுடப்பெண்டிர் நயந்த பக்கமாகக் கூறிய கட்டளைக்கலிப்பா என்பர்.

இக்கட்டளைக்கலிப்பாவிலே வரும் பிரகேளிகையும் நாமாந்தரிதை என்னும் பிரகேளிகையாம். பிரகேளிகை என்பதும் நாமாந்தரிதை என்பதும் முன் விளக்கப்பட்டன. இங்கே குறித்த பொருளை மறைத்து நின்று வெளிப்படையிலே வேறொருவகையாகப் புலப்படும் நாமங்களை முன்னர்க் கூறுதும்.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரசித்திபெற்ற ஊர்களின் நாமங்களுள்ளே பதினொரு நாமங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன; அவைகள் யாவையெனின்; சுன்னாகம், தாவடி, கொக்குவில், கொடிகாமம், ஆனைக்கோட்டை, கட்டுடை, உடுவில், பன்னாலை, மல்லாகம், பலாலி, இளவாலை என்பன.

இவற்றுள்ளே சுன்னாகம், தாவடி, கொக்குவில், உடுவில், மல்லாகம் என்னும் ஐந்தும் யாழ்ப்பாணநகரி லிருந்து வடபாகத்திலுள்ள காங்கேசன்துறைக் கடற்கரைக்குச் செல்லும் நெடுந்தெருவின்

பக்கங்களில் இருக்கும் ஊர்கள். கொடிகாமம் என்பது யாழ்ப்பாணநகரியிலிருந்து கிழக்கே கடு-மைல் தூரத்திற்கு அப்பாலிருக்கும் ஓரூர். இப்போது இவ்விடம் புகைவண்டி தங்கிச்செல்லும் இடங்களுள் ஒன்றாகியும் விளங்குகின்றது. ஆனைக்கோட்டை, கட்டுடை என்னும் இரண்டும் யாழ்ப்பாணநகரிக்கு வடமேற்கே சமீபத்திலிருக்கும் ஊர்கள். பன்னாலை, இளவாலை என்னும் இரண்டும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றினாலும் சிறந்து விளங்கும் கீரிமலைக்குப் பக்கமாயிருக்கும் ஊர்கள். பலாலி என்பது யாழ்ப்பாணநகரியிலிருந்து புன்னைநகர்க்கூடாகச் செல்லும் நெடுந்தெருவின் முடிவிலே வடகடற்கரையிலே இருக்கும் ஓரூர்.

இங்கே மறைத்துவைக்கப்பட்டபொருளையும் கூறுதும். முடிவிலாதுறை சுன்னாகத்தான் வழி-ஒருகாலும் அழிவின்றி நிலைபெற்றிருக்கின்ற திருக்கைலாசபதியுடைய குமாரராகிய முருகக்கடவுள் —முந்தித் தாவு அடி கொக்குவின்மீது வந்தடைய-முந்தித் தாவுகின்ற அடிகளையுடைய குதிரைவாகனத்தின் மீதிவர்ந்து பவனிவந்து சமீபிக்க—ஓர் பெண் கொடிகாமத்தாள் ஆனைக்கோட்டை அசைத்து வெளிகட்டு உடைவிட்டாள்-ஒரு பெண்ணானவள் தாங்குதற்கரிய கொடுங்காமமுடையவளாய் ஸ்தனங்களை அசைத்து மருங்குற் பிரதேசத்திற்கட்டும் வஸ்திரக்கச்சினை நெகிழவிட்டாள். ஓர் இளவாலையே-வேறோர் இளம்பெண்ணானவள்—உடுவிலான் வர பன்னாலையான் மிக உருத்தனன்-சந்திரன் உதடஞ் செய்துவர மன்மதனும் மிகக் கோபித்தனன்—கடம்புற்ற மல்லாகத்து தடையிலாது அணை என்று-கடப்பமாலை அணியப்பட்டிருக்கும் வலிமையாகிய மார்பிலே தடையின்றி அணைத்தருள்க என்று சொல்லி—பல் ஆலி கண்சார வந்தனள் - பலதுளிகள் கண்களினின்றும் சாரும்படி வந்தாள் என்க.

சுன்னாகம்—வெள்ளிமலை. சுல்—நாகம்+சுன்னாகம் எனச்சந்தியாயிற்று. சுல்—வெள்ளி. நாகம்—மலை. ஒருகாலுமழிவின்றி நிலைபெறல்பற்றி முடிவிலாதுறை என விசேடிக்கப்பட்டது. சுன்னாகத்தான் - திருக்கைலாசபதி. வழி—மகன் ; வமிசத்திற்கு வழி போன்று நிற்பவன். தாவடி என ஒரு சொல்லாகக்கொண்டு யுத்தம்

எனப் பொருள்கூறலு மொன்று. கொக்கு என்பது முற்றுகரவீறாய் நின்ற ஒரு தேசிகச்சொல். கொடிய காமம் என்புழி யகரம் தொகுத்தல். கொடி என்பதனைக் காமத்திற்கு விசேடணமாக்காது பெண் என்பதனோடு சேர்த்துப் பெண்கொடி எனக்கொள்ளலும் அமையும். ஆனைக்கோடு, வெளி என்னும் இரண்டும் உவமாகுபெயர்கள்.

உடுவிலான்=நட்சத்திரத்தை மனைவியாகவுடையவனாகிய சந்திரன். உடு=நட்சத்திரம். இல்=மனைவி. பன்னாலையான்=சொல்லப்படுகின்ற கரும்பாகிய விற்படையையுடைய மன்மதன். ஆலை=கரும்பு. மல்=வலி. ஆகம்=மார்பு. பல் ஆலி=பலவாகிய துளி. இளவாலை=கட்டிளமை யுடையவள்.

முருகக்கடவுள் குதிரையிற் பவனி வருதலைக்கண்ட பெண்களுள்ளே ஒருத்தி உத்தரீயம் சோரப்பெற்றாள் எனவும் மற்றொருத்தி கண்ணீர் சோரப்பெற்றாள் எனவும் கடவுண்முயக்கம் விரும்பிய மானுடபெண்டிரிருவர் கொண்ட மலிவு கூறிய பாடாண்டிணை.

ஒருகாலுமழிவின்றி நிலைபெறுதல்பற்றித் திருக்கைலாசமலையை "முடிவிலாதுறை" என்று விசேடித்துக் கூறியதற்குப் பிரமாணமாகக் கந்தபுராணத்திலிருந்து ஒரு செய்யுளும் காட்டுதும்.

மாடு சூழ்தரு மேருவே யாதியாம் வரைகள்
பாடு சேரினு முலகெலா மழியினும் பரந்து
கூடு மண்டலங்கள் குலையினுங் கொன்றைவே ணியன்போற்
கேடி லாமலே யமர்வது சயிலையங் கிரியே.

இவ்விசேடணத்தைச் சிறீகண்ட பரமேசுர மூர்த்தி மேலேற்றியுரைப்பினுமமையும். கட்டுடை விடுதலும், பலாலி கண்சார்தலும் மயக்கநோயைப் புலப்படுத்தும் இலாஞ்சனைகள். சந்திரனும், மன்மதனும் அந்நோய் மீதூரற்குக் காரணர்.

இதனைப் பிரயோகவிசேடத்தின் வகையுள் ஒன்றாக அமையாது பொருளணிகளுள் ஒன்றாகவைத்துச் சமாசோக்தி என்னும் அலங்காரமென்பாருமுளர். வேறு கூறும் ஆலங்காரிகருமுளர்.

இக்கட்டளைக்கலிப்பாவிலும் கூவிளம்வரற்பாலன இடங்களிலே தேமாங்காய் முதலிய வாய்ப்பாட்டுச் சீர்கள் தொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றால் இழுக்கடையாமை முன்னையகட்டளைக் கலிப்பாவினுரைக்கண் பிரமாணசகிதமாகக் கூறப்பட்டது. ஆங்குக் காண்க. முத்தகத்திரயத்துள்ளே இனிக்கூறற்பாலது ஒன்றேயாம். அதுவும் விரைவிற் கூறப்படும்.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்
பிலவங்கஞு சித்திரைமீ

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

# இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரம்.

## நட்புக்கோட்படலம்.

எனவினைத் தினைய வெண்ணி யிவர்கின்ற காத லோதக்
கனைகடற் கரைநின் றேறக் கண்ணிணை களிப்ப நோக்கி
யனகனைக் குறுகி ஞனவ் வண்ணலு மருத்தி கூரப்
புனைமலர்த் தடக்கை நீட்டிப் போந்தினி திருத்தி யென்றான்.

என்னும் உ0-ம் செய்யுளில், 'கனைகடற் கரைநின்றேற' என்பது 'கனைகடற்றிரையு ளாழ்ந்து' எனக் காணப்படுகின்றது. காதலாகிய கடலுளாழ்ந்து எனப் பொருள்கொள்ளுமிடத்துப் பின்னையதே பொருத்தமுடைத்து. 'ஏற' என்னும்பாடமும் இத்துணைச் சிறப்பின்மைகாண்க. திரையையுடைய கடலுள் என மாற்றிப் பொருள்கொள்க.

ஷை.

நாலு வேதமா நவையி லார்கவி
வேலி யன்னதோர் மலையின் மேலுளான்
சூலி தன்னருட் டுறையின் முற்றினான்
வாலி யென்றுளான் வரம்பி லாற்றலான்.

*

என்னும் ௩௭-ம் செய்யுளில், 'நாலு வேதமா நவையி லார்கலி - வேலி யன்னதோர் மலையின் மேலுளான்' என்பது "நாலு வேதமா நவையில் சாலியின், வேலி யன்னவன் வெள்ளி வெண்கிரி' எனக்காணப்படுகின்றது. வேதமாகிய சாலிக்கு வேலியை யொத்தவன் எனப் பொருள்கொள்ளுமிடத்துப் பின்னையதே பொருத்தமுடைத்து. எனவே வேதவொழுக்கங்களையெல்லாம் பாதுகாப்பவன் என்றபடி. வேலி என்பதற்கியையச் சாலி எனவருதல் சிறப்புடைத்தாதல் காண்க. இதனைச் சிவனுக் கேற்றினு மமையும். சூலி—சிவன்.

௸

நிலனு நீருமா நெருப்புக் காற்றுமென்
றுலைவில் பூதநான் குடைய வாற்றலா
னலையின் வேலைசூழ் கிடந்த வாழிமா
மலையி னின்றமிம் மலையின் வாவுவான்.

என்னும் ௩௯-ம் செய்யுளில், "நிலனு நீருமா நெருப்புங் காற்றுமென் றுலைவில் பூதநான் குடைய வாற்றலான்" என்பது "நிலனு நீரொடு நெருப்புங் கால்வெளி - யுலைவில் பூதமைந் துடைய வாற்றலான்' எனக்காணப்படுகின்றது. பூதமைந்தாகலின் ஐந்தையுங் கூறலே சிறப்புடைத்தென்க.

௸

கிட்டி னர்பொரக் கிடைக்கி னன்னவர்
பட்ட நல்வரம் பாக மெய்துவா
னெட்டு மாதிரத் திறுதி நாளுமுற்
றட்ட மூர்த்திதாள் பணியு மாற்றலான்.

என்னும் ௪௦-ம் செய்யுளில், 'பட்டநல்வரம் பாகமெய்துவான்' என்பது 'பட்டமாபலம் பாதியெய்துவான்' எனக் காணப்படுகின்றது. பாதியெய்துவது வலிமையிலேயேயாதலின் பின்னையதே பொருத்தமுடைத்து.

௸

படர்ந்த நீணெடுந் தலைபரப்பிமீ
தடர்ந்து பாரம்வந் துறவனந்தனுங்
கிடந்து தாங்குமிக் கிரியை யேவினு
னடந்து தாங்குமிப் புவன நானெலாம்.

என்னும் ௬௪௯-ம் செய்யுளில், 'அடர்ந்து பாரம்வந் துறவனந்தனுங் கிடந்து தாங்குமிக் கிரியை யேவினல்' என்பது 'அடர்ந்து பாரிடந் தனை யனந்தனுங் - கிடந்து தாங்கு மிக்கிரியின் மேவினன்' எனக் காணப்படுகின்றது. அனந்தன் பாரிடந்தனைக் கிடந்து தாங்கும்; இவன் இப்பூமியை நடந்து தாங்கும் எனப் பொருள்கொள்ளுமிடத்துப் பின்னையதே சிறப்புடைத்து. 'பாரம் வந்துற' என்பது வாளா கூற்றாய்ச் சிறப்பின்றி நிற்றல் காண்க.

ஷ

மெய்க்கொள் வாலினன் மிடலி ராவணன்
தொக்க தோளிறத் தொடர்ப்ப டுத்தநாள்
புக்கி லாதவும் பொழிய ரத்தநீ
ருக்கி லாதவு முலகம் யாவதே.

என்னும் ௬௮-ம் செய்யுளில், 'புக்கிலாதவும் பொழியரத்தநீ-ருக்கிலாதவு முலகம் யாவதே' என்பது 'புக்குலாயவெம் பொழியரத்தநீ-ருக்கிலாதவெவ் வுலக மூழியாய்' எனக்காணப்படுகின்றது. முன்னையது பொருட்பொருத்த மின்றாதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து. உலாய-பரந்த. புக்கு உக்கிலாதது எவ்வுலகம் எனக் கூட்டுக.

ஷ

எகி வாலியு மிருது வேழொடேழ்
வேக வெம்பிலந் தடவி வெம்மையான்
மோக வென்றிமேன் முயல்பின் வைகிடச்
சோக மெய்தினன் றனைது ளங்கினன்.

என்னும் ௫௬-ம் செய்யுளில், 'மோக வென்றிமேன் முயல்பின் வைகிட' என்பது 'மோக மோடமர் முயல்பின் வைகிட' எனக்காணப்படுகின்றது. ஆசையோடு போர்முயற்சியிலிருக்க எனப் பொருள்கொள்ளுமிடத்துப் பின்னையதே பொருத்தமுடைத்து. முயற்சி என்னும் சொல்லுக்கு 'வென்றி' என்பது இயைபின்மைகாண்க.

ஷ

என்று தானுமவ் வழியி ரும்பிலஞ்
சென்று முன்னவற் றேடு வேனவற்
கொன்று ளான்றனைக் கொல்லொ ணதெனிற்
பொன்று வேனெனப் புகுதன் மேயினன்.

என்னும் ருஹ-ம் செய்யுளில், 'கொல்லெனுதெலில்' என்பது 'கொல்வனன்றெனில்' எனக்காணப்படுகின்றது. கொல்வன்: அது கூடாதாயிற் பொன்றுவேன் என்னும் பொருளே சிறந்து காட்டுதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

ஷை

தடுத்து வல்லவா தணிவு செய்துநோ
யெடுத்த வேலையோ ரிசையவி னலியைக்
தடுத்த காவலு மரிக வானையாற்
கொடுத்த துண்டிவன் கொண்ட னன்கொலாம்.

என்னும் ருசு-ம் செய்யுளில், 'எடுத்தவேலையோ ரிசையவி னுலியைத்து' என்பது 'எடுத்திவன்றனக் கிறைமையோடிசைந்து' எனக்காணப்படுகின்றது. முன்னையது பொருட் சிறப்பின்மையிற் பின்னையதே சிறப்புடைத்து. இறைமையோடு இசைந்து அடுத்த காவல்—தலைமையோடு பொருந்திய அரசு: அஃதாவது முதலரசு என்றபடி.

ஷை

வால்வி ளைத்துவான் வளர்நி மிர்ந்தெனக்
கால்வி ளைத்தவன் கடிது தைத்தலும்
நீனி றத்துவின் னெடுமு கட்டமும்
வேலை புக்கவும் பெரிய வெற்பெலாம்.

என்னும் சுO-ம் செய்யுளில் 'வான்வளர் நிமிர்ந்தென' என்பது 'வான்வழிதிறந்திட' எனக்காணப்படுகின்றது. வழிதிறந்திடவே உதைத்ததாதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

இங்ஙனம்,
சி. கணேசையர்,
புன்னாலைக்கட்டுவன்,
யாழ்ப்பாணம்.

# பத்திராசிரியர் இலக்ஷணம்.

கல்வியறிவில் வல்லவராயும், தேசாசாரங்களையும் சமயாசாரங்களையும் நன்றாக விசாரித்தறிந்தவராயும், பிறருக்குவரும் ஆக்கக்கேடுகளைத் தம்முடைய ஆக்கக்கேடுகளாவெண்ணுகின்றவராயும், பரோபகாரம், சத்தியம், நடுவுநிலைமை, திடசித்தமுதலிய நற்குணங்களையுடையவராயும் இருப்பவரே பத்திராசிரியராதற்குத் தக்கவர். (பத்திரிகையாவது தேசாசாரங்களையும், சமயாசாரங்களையும், தேசவர்த்தமானங்களையும் யாவர்க்கும் புலப்பட அறிவிக்குங் கருவியாயுள்ளது.) பத்திராசிரியர் அரசருக்கும் குடிகளுக்கும் நடுவாகநின்று அரசநீதிகளைக் குடிகளுக்கும் குடிகளொழுக்கவரலாறுகளை அரசருக்கும் பட்சபாதமின்றியெடுத்துச் சொல்லல்வேண்டும். புலவர்களுக்குள் அல்லது சமயத்தார்க்குள் விவாதஞ்சம்பவிக்குங்கால், பத்திராசிரியர் ஒருபாற்கோடாமல் நின்று, அவர்வழக்கை நன்றாகவிசாரித்து, தக்கமுடிவுரையை யெடுத்து அவர்கள் கலகம் ஒழியும் வண்ணம் சொல்லவேண்டும். சாதியாருள்ளும் சமயத்தாருள்ளும் இராசாதிகாரிகளுள்ளும் அக்கிரமங்கள் தலைப்படுங்காலத்து, பத்திராசிரியர் அவ்வக்கிரமங்களை அஞ்சாமல் எடுத்து வெளியிட்டு அவர்கள் சற்புத்தியடைதற்குரிய நீதிவாக்கியங்களை நன்றாகப்பேசல்வேண்டும். தூஷணம் நிறைந்த கடிதங்களையும் குதர்க்கம் பொதிந்த கடிதங்களையும் பத்திரிகையில் பிரசரித்தல் பத்திராசிரியர்க்குக் குணமன்று. உலகத்திலே கல்வியறிவில்லாதவர்கள் பலரும் அஃதுள்ளவர்கள் சிலருமாயிருத்தலால், பத்திராசிரியர் நல்லறிவைவளர்த்தற்குரிய சாதாரணமான உறுதிப்பொருள்களைக் கடினசந்தியின்றி இலகுவான வசனநடையிற் பெரும்பான்மையும் பத்திரிகையில் எழுதிவரல்வேண்டும். ஆயினும் கல்விகற்கும் மாணாக்கர்களுக்கும் கற்றுத்தெளிந்த முதியோருக்கும் உபயோகமாகத்தக்க நன்மையான சாஸ்திரப்பொருள்களையும் பத்திராசிரியர் பத்திரிகையில் சிறுபான்மையாக எழுதிக்கொண்டு வருதல் வேண்டும். தேசங்கடோறுஞ் சம்பவிக்கும் நானாவித சம்பவங்களுள்ளே அதர்மங்களைக் கைவிடுதற்கும் தருமங்களைக் கைக்கொள்ளுதற்கும் ஏதுவாகும் நல்லறிவைத்தருதற்குரிய சம்பவங்களை மாத்திரம் பத்திராசிரியர் பத்திரிகையில் பிரசரித்தல்வேண்டும். சம்

பவங்களைத் தீர்க்கவிசாரணை செய்யுமுன் பத்திரிகையிற் பிரசரித்தல் பத்திராசிரியர்க்கு இழுக்காகும். ஆச்சரியத்தைத்தரத்தக்க சமாசாரங்களும் பத்திராசிரியரால் பத்திரிகையிற் பிரசரிக்கத்தக்கனவேயாம். தீக்குணங்களும் தீச்செயல்களுமுடையவர்கள் தமக்கினியராயின் அதுபற்றி அவரை நற்குணநற்செய்கையுடையவரென்று பாராட்டிப் புகழ்தலும், நற்குண நற்செய்கைகளையுடையவர்கள் தமக்கினியரல்லராயின் அதுபற்றி யவரைத் தீக்குணம் தீச்செயல் உடையவரென்று அபவாதங்கூறி நிந்தித்தலும் நன்மையை விருத்திசெய்தற்குரிய பத்திராசிரியர்க்குக் கடனாகாவாம். பத்திராசிரியரின் பார்வைக்கு வரும் புத்தகங்கள் பண்டையாசிரியர் கொள்கையுடன் முரணுமாயின் அவற்றையுள்ளபடியே எடுத்துக்காட்டி நடுவுநிலைமை கோணாது கண்டிக்கவேண்டும். அவ்வாறு கண்டியாதொழியின் அது தமிழ்ப்பாஷைக்கும் பத்திரிகைக்கும் இழுக்காகும். பண்டைநூலுரையாசிரியர் கொள்கையுடன் முரணிச்செய்யும் உரைகளைக் கண்டித்துப் பிறரொருவர் எழுதினால், அவற்றையஞ்சாது பகிரங்கஞ்செய்தல்வேண்டும். அவ்வுரைகாரர் தமக்கினியரென்ற வெண்ணங்கொண்டு சாட்டுப்போக்குச்சொல்லுதல் பத்திராசிரியர்க்கழகன்றாம். பத்திராசிரியர் அற்பவிஷயங்களையும், பரிகாசத்துக்குரிய விஷயங்களையும் பத்திரிகையில் வரைந்து நிரப்புவாராயின், அஃது அறிவாளரால் வெறுக்கப்பட்டுப் பத்திராசிரியரின் வெள்ளறிவைக்கண்டு நகைத்தற்கு மிடமாகும்.

உதாரணமாக, "திறஞ்சுருட்டு," "இன்னார்க்கும் இன்னார்க்கும் விவாகம் பேசிவைத்திருக்கிறார்கள்" முதலிய விஷயங்களும் பிறவுமாம். பத்திரிகைக்கு விஷயமெழுதவறியாதவர்கள் பத்திராசிரியரானால், ஐயையோ பாவம்! என்ன செய்வார்கள். தம் அறிவுக்கெட்டியவைகளைத்தானே யெழுதுவார்கள். இதனால் பத்திரிகைக்குரிய மரியாதை குறைவாகும் என்பதையுணர்வாராயின் இப்படிச்செய்வார்களா? இத்தீச்செயல்களைப் பத்திராசிரியர் மேற்கொள்ளின் அவமதிப்பையும் பழிபாவங்களையும் தப்பாமல் அடைவரென்பது சரதமேயாகும்.

காரை. கா. சிவசிதம்பர ஐயர்,
யாழ்ப்பாணம்.

# நல்லொழுக்கம்.

(௨௬௭-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

[ஸ்ரீ: இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

மற்றவர்களுடைய குணங்களை உண்மையாகவே புகழ்ந்துபேசுவதைப்பார்க்கிலும் அதிக இஷ்டர்களைச் சம்பாதிக்கத்தக்கது வேறு எந்தக்குணமுமின்று. அது—உதாரமான சுபாவத்தையும், மனோசுத்தத்தையும், சினேக சுபாவத்தையும், யோக்கியதையைச் சந்தோஷத்துடன் கிரகித்தலையும், காட்டுகின்றது. 'போஸ்வெல்' என்பவர் ஜான்ஸனைப்பற்றி உண்மையுடனும் பூஜ்யதையுடனும் சிலாகித்ததனால் தான் அவரால் நமக்கு ஓர் மிகவும் நேர்த்தியான ஜீவ்யசரிதம் கிடைத்தது. எண்ணிறந்த ஆட்சேபணைகளும் நிந்தனைகளும் செய்யப்பட்டிருந்தும், பூஜ்யராகிய ஜான்ஸன்விஷயத்தில் பற்றுதல் கொண்டு விசுவாசமாயிருப்பதற்கான சில சுயம்பான நற்குணங்கள் போஸ்வெல் இடம் இருந்திருக்கவேண்டுமென்று யோசிக்கத்தக்கதாகிறது. 'போஸ்வெல்' என்பவரை, யூகமாவது சந்தோஷிப்பிக்கும் குணமாவது அல்லது வாக்குவளமாவது இன்றி பலஹீனமும், வீண்பெருமையும், தாளாண்மையும், விநோதபிரியமும் அதிகப்பிரசங்கமும் உள்ளடம்பனும் வீணனுமென முற்றிலும் நிந்திக்கப்படத்தக்கவராக 'மக்காலே' என்பவர் சொல்லுகிறார். ஆனால் 'கார்லைல்' என்பவர் அந்த ஜீவசரித்திரக்காரருடைய குணங்களைச்சொல்வதில் மிகவும் நீதியுள்ளவரென்பதில் சந்தேகமில்லை. 'போஸ்வெல்' அனேக விஷயங்களிற் பயனின்மையும் மூடத்தனமும் உடையவராயிருந்தபோதிலும், யதார்த்தஞான விஷயத்திலும், மேலான குணவிஷயத்திலும் அன்பும் வியப்பும் நிறைந்தவராய் பாணுக்கருக்குரிய பழமையான உயர் உணர்ச்சியை யுடையவரென்று சொல்லுகிறார். அப்பேர்ப்பட்ட குணங்கள் இல்லையேல் ஜான்ஸனுடைய ஜீவ்ய சரித்திரமானது ஒருக்காலும் எழுதப்பட்டிராது என்பதைக் கார்லைல் என்பவர் வற்புறுத்துகிறார். போஸ்வெல் என்பவர், ஞானத்தை அறிவதற்கு மனசையும், கண்ணையும், அதை வெளியிடுவதற்கு வாக்கையும் உடையராயிருந்தமையாலும், அவருடைய, தடையற்ற

அந்தரங்க ஆராய்ச்சியாலும், கூர்மையான புத்தியாலும், எல்லாவற்றையும்விட அவருடைய அன்பாலும், குழந்தைபோலும் மனத்தூய்மையாலும் அவர் ஒரு நல்ல புஸ்தகத்தை எழுதினாரென்று அவர் கூறுகின்றனர்.

உதாரகுணமுள்ள மனசையுடைய அனேக இளைஞர்கள்-முக்கியமாய்ப் புஸ்தகப்படிப்பினராயிருப்பவர்களைத் தங்களுக்குப் பூஜ்யராக எடுத்துக்கொள்கின்றனர். இவ்வாறு, 'அல்லன் கன்னிங்காம்,' என்பவர் நித்ஸ்டேலில், ஓர் கம்மியனுக்குள் வேலை பழகும்போது ஸர் வால்டர் ஸ்காட் தெருவின் வழியே போகிறதைப் பார்ப்பதற்காக மட்டும் எடின்பர்க்கு வழிமுழுவதும் நடந்து போனார். அந்த வாலிபனுடைய சிரத்தையை நாம் தன்னறியாமல் புகழ்ந்து அந்தப் பிரயாணத்தைச் செய்கிறதற்கு அவனை யேவிய நோக்கத்தை நாம் பூஜிக்கிறோம். 'ஸர்ஜோஷுவா ரைனால்ட்ஸ்' என்பவர் பத்து வயதுப் பையனாயிருக்கும்பொழுது 'போப், என்பவரைத் தொடுவதில் ஒரு வகையான புண்ணியமிருக்கிறது போல நினைத்து வரிசை வரிசையாய் நின்ற ஜனங்களின் ஊடே தன் கையை நீட்டினார் என்று சொல்லப்படுகிறது. அதற்கு வெகு நாளைக்குப் பிந்தி 'ஹேய்டன்' என்னும் சித்திரக்காரர் 'ரைனால்ட்ஸ்' உடைய சொந்த ஊருக்குப் போனபொழுது அவரைக் கண்டு தொடுவதில் பெருமை பாராட்டினர் 'ரோகெர்ஸ்' என்னும் கவிஞர் பாலபருவத்திலே டாக்டர் 'ஜான்ஸன்' ஐப் பார்க்கப் பேரவாக்கொண்டதைப்பற்றிச் சொல்வது வழக்கம். ஆனால் அவருடைய கையானது 'போல்ட்கோர்ட்'டிலுள்ள ஜான்ஸனுடைய வீட்டுக்கதவின் தட்டுகருவியில்வைக்கப்பட்டபொழுது அதைரியப்பட்டுத் திரும்பிவிட்டனர். அப்படியே, காலஞ்சென்ற 'ஐஸாக்டிஸ்ரெயிலி' என்பவர் இளமைப்பருவத்தில் அதே காரியத்திற்காக போல்ட்கோர்ட்டுக்குப் போயினர். கதவைத்தட்டும்படியான தைரியம் கொண்டபோதிலும் அந்தப்பெரிய அகராதி கிரந்தகர்த்தர் கொஞ்சநேரத்துக்கு முன்புதான், இறந்துபோய்விட்டனர் என்று அவருடைய வேலைக்காரரால் தெரிந்தபொழுது பீதியடைந்தனர்.

ஆனால் இறுக்கமும் அற்பத்தனமுமுள்ள மனசை உடையவர் அந்தரங்கத்துடன் புகழமாட்டார். அவர்களுடைய சொந்தத்துர்ப்பாக்கியத்தால் பெரியமனிதர்களையும் பெரிய காரியங்களையும் அறிய

வாவது ஆகவே பூஜிதைசெய்யலாவது மாட்டார்கள். இழிவான சுபாவமுடையோர் அவமதிப்புடன் புகழ்கின்றனர். ஆண்தேரைக்கு உயர்ந்த அழகின் ஸ்வரூபமானது பெண்தேரையே. விதூஷகன் பெரியவிதூஷகனையே உயர்ந்த மனிதனாக மதிப்பான். அடிமை வியாபாரி ஓர் மனிதனை அவனுடைய தேகபலத்தைக்கொண்டுமதிக்கிறான். 'ஸர்காட்பிரே நெல்லர்' என்பவர் போப் என்பவர் முன்பில் ஓர் 'கினீயா' வியாபாரியிடம் உலகத்தில் இரண்டுமிகவும் பெரியமனிதரைத் தான் பார்த்ததாகச் சொன்னபோது அவன் சொன்னதாவது:—"நீங்கள் எவ்வளவு பெரிய மனிதர் என்பது எனக்குத்தெரியாது. உங்களுடைய தோற்றம் எனக்குப்பிடித்தமில்லை. உங்கள் இருவரையும் ஒன்றாகக்கூட்டினதைப்பார்க்கிலும் மெத்த அதிகப்பருமனுள்ள மனிதனை எல்லா எலும்புகள் தசைகளுடனும் பத்துகினிக்கு (பவுனுக்கு) நான் அடிக்கடி கிரயத்திற்கு வாங்கியிருக்கிறேன்."

நம்முடைய மிகவும் நன்மையான இஷ்டர்களுடைய கஷ்டங்களில் நமக்கு முற்றிலும் இனிமையற்றதாயில்லாத சில உள்ளன என்று 'ரோச்பௌக்கால்ட்' என்பவர் தம்முடைய நீதிமொழிகளில் சொன்னபோதிலும் அற்பத்தனமையும் முக்யமாய் இழிவுமான சுபாவம்தான், பிறர் நோக்கத்தைக்கெடுப்பதில் இன்பப்படுதலும் பிறருடைய ஜயத்திற்காக எரிச்சற்படுதலுமாக நிகழ்கின்றது. உதாரகுணத்திற்குப் பொருந்திய சித்தம் இல்லாவண்ணம் அமையப்பெற்று, தங்களுக்குத்தாங்களே நிர்ப்பாக்கிய முள்ளவரான புருஷர்கள் உளராகின்றனர். அவதூறு பேசுவோருடைய ஸ்தானத்திலுள்ளவர்தான் சகலமான ஜனங்களிலும் மிகவும் பொருத்தம் இல்லாத மனிதர். இப்பேர்ப்பட்டவர், நல்லகாரியத்தில் மற்றவர்கள் அடைந்த வெற்றியைக்கூடப் பெரும்பாலும் அவர்கள் தம் சொந்தத்திற்குச்செய்த குற்றமாக மதிக்கத்தொடங்குகின்றனர். மற்றவன், முக்கியமாய்த் தாங்கள்புரியும் வித்தை வேலை அல்லது உத்தியோகத்தைவஹிப்பானுயின், அவனுடைய கீர்த்தியைக்கேட்கச் சகிக்கமாட்டார்கள். அவர்கள் ஒருமனிதனுடைய குற்றங்களை மன்னிப்பாராயினும் தங்களைப்பார்க்கிலும் நன்றாய் ஒரு காரியத்தை அவன்செய்ததற்காக மன்னிக்கமாட்டார்கள். தாங்கள்தாமே தவ

றின விடத்தும் அவர்கள் அவனை மிகவும் இரக்கமறத்தூஷிக்கின்றனர். வெறுக்கத்தக்க தூஷகன் தன் எதிரியைப்பற்றி நினைக்குமாறு:—

"கடவுள் அவனுக்கு அவ்விதமான புத்தியைக்கொடுத்த பொழுது அவனை வெறுப்பதற்கு எனக்குக்காரணமில்லையா." என்பது.

இழிவான மனோபாவமுடையவர்கள், முகத்தைச்சுழித்தல், அற்பக்குற்றங்களை எடுத்துக்கூறல், குற்றங்களைத் தேடிப்பிடித்தலாகிய தன்மையராய், மானஹீனமான காரியம் அல்லது துன்மார்க்கமான ஜயகாரியம்தவிர மற்ற ஒவ்வொன்றையும் நிந்திக்கத்தயாராய் இருக்கின்றனர். அப்பேர்ப்பட்டவர்களுக்கு மிகுந்தசாதனமானது நல்லொழுக்கமுள்ளவர்களிடத்தில் காணப்பட்ட குற்றங்களேயாம். புத்திசாலிகள் தப்பிதஞ்செய்யவில்லையானால் மூடர்களுக்கு வெகுகஷ்டமாய் இருக்குமென்று 'ஜார்ஜ்ஹெர்பர்ட்' என்பவர் சொல்லுகிறார். ஆயினும், புத்திசாலிகள் மூடர்களுடைய குற்றங்களைக்கண்டு அக்குற்றங்களினின்றும் நீங்கிக்கொள்வதால் அவர்களிடத்திலிருந்து ஒன்றை கற்றுக்கொண்டபோதிலும், புத்திசாலிகள் ஸ்தாபித்த நிதர்சனத்தினால் மூடர்கள் நயம்பெறுவது அரிது. பெரியோர்களுடைய ஒழுக்கத்தினாலாவது அல்லது அவர்கள் காலத்தின் நடப்பிலாவது உள்ள குற்றங்களை மாத்திரம்கண்டுபிடிப்பதற்கு ஜாக்கிரதைப்படுகிற குணமானது நிர்ப்பாக்கியமானதென்று ஒரு ஜெர்மன் கிரந்தகர்த்தர் சொல்லியிருக்கிறார். நாம் அவைகளைப்பற்றி போலிங்புரோக் என்பவருடைய சற்குணத்தினால் தீர்மானிப்போம். அவரிடம் 'மாரில்பரோ' என்பவருடைய ஒரு போலிக் குறையை ஞாபகப்படுத்தினபொழுது அவர்சொன்னதாவது:—"அவர் மிகவும் பெரிய மனுஷனாயிருந்ததனால் அவருடைய குறையை நான் மறந்துவிட்டேன்" என்பதாம்.

வசிக்கிற அல்லது இறந்த பெரியமனிதர்களைப் புகழ்தலானது ஏறக்குறைய அவர்களைப்போல் நடக்கவேணுமென்ற இச்சையை உண்டாக்குகிறது. இளையனாயிருக்கும்பொழுது 'தெமிஸ்டோகிளஸ்' என்பவருடைய மனசானது அவருடைய காலத்திலிருந்தவர்களுடைய அரியசெய்கையால் ஆசையூட்டப்பட்டு தம்முடைய தேசத்திற்கு ஊழியஞ்செய்வதில் தம்மைப் பிரகாசிப்பிக்க விரும்பினர்.

'மாராத்தன்' இல் யுத்தமானதுநடந்தபொழுது அவருக்குத்துக்கமானது உண்டாயிற்று. அதின் காரணமானது அவருடைய இஷ்டர்களாற்கேட்கப்பட்டபொழுது 'மிலிட்டியேட்ஸ்' இன் கொள்ளைப்பொருள்கள் அவரைத்தூங்கவிடவில்லையென்று மறுமொழிகொடுத்தார். சில வருஷங்களுக்குப்பிந்தி எத்தேனியன் சேனைகளுக்கு அவர் தலைவனாகவந்து ஆர்டிமிஸ்ஸியம்' 'ஸலாமிஸ்'இன் யுத்தங்களில் 'செக்சீர்ஸ்' உடைய பாரசீகசப்பற்சேனையைத் தோற்கடித்ததால் அவருடைய தேசத்தார் அத்தேசமானது அவருடைய ஞானத்தினாலும் பலத்தாலும் ரட்சிக்கப்பட்டதென்று நன்றியறிவோடு ஒப்புக்கொண்டனர்.

துஸ்ஸிடைட்ஸ் என்பவர் பையனாகவிருக்கும்போது ஹெரோடோட்டஸ் என்பவர் அவர் செய்த சரித்திரகிரந்தத்தை வாசிக்கக்கேட்டவளவில் அவருக்குக்கண்ணீர் உண்டாயிற்று என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய மனதில் உண்டாகிய அழுத்தமானது அவருடைய யூகத்தின்போக்கைத் தீர்மானிக்கத்தக்கதாயிருந்தது. டிமாஸ்தெனஸ் என்பவர் காலிஸ்ட்ரேட்டஸ் என்பவரின் பிரசங்கவன்மையினால் ஒருகாலத்தில் ஆசைகொளுத்தப்பட்டுத் தானும்பிரசங்கவல்லவராகத் தக்க பேரவாவானது உண்டாயிற்று. ஆனால் டிமாஸ்தெனஸ் என்பவர் சரீர தூர்பலமும் மெலிவான குரலும் தெளிவில்லாத சப்தமும் சொற்பமூச்சடக்கமும் உள்ளவராயிருந்தார். இந்தக்குறைகளை ஜாக்கிரதையானபடிப்பினாலும், மாற்றக்கூடாததீர்மானத்தாலுந்தான், ஜெயிக்கத்திராணியுள்ளவரானார். ஆனால் அவர் எவ்வளவு பழக்கஞ்செய்தும் ஒருக்காலும் விரைவில் பேசத்தகாதவராகவேயிருந்தார். அவருடைய பிரசங்கங்களில் முக்கியமாய் மிகவும் கீர்த்திபெற்றவைகள் ஜாக்கிரதையாய் உழைத்து உண்டாகிய அடையாளங்களைக்காட்டுகின்றன. அந்தப்பிரசங்கவல்லவருடைய வித்தையும் சுறுசுறுப்பும் ஏறக்குறைய ஒவ்வொருவாக்கியத்திலும் விளங்குகின்றன.

ஒழுக்கத்தைப்பார்த்து நடந்து, பெரியோர்களுடைய நடை, உடை, யூகங்களால் உருவாக்கிய ஒழுக்கமுடையோரது இதுபோன்ற திருஷ்டாந்தங்கள் சரித்திரங்கள் எங்கும் வியாபித்திருக்கக்கா

ணப்படுகின்றன. யுத்தவீரர்கள், ராஜதந்திரங்கள், பிரசங்கவல்லவர்கள், தேசாபிமானிகள், கவிஞர்கள், சிற்பர்கள், எல்லோரும் ஏறக்குறையத் தன்னறியாமலே தங்களுக்கு முன்னிருந்த அல்லது பார்வையில் நடந்து காட்டிய மற்றவர்களின், ஒழுக்கங்களாலும் செய்கைகளாலும் வளர்க்கப்பட்டிருக்கின்றனர்.

பெரியவர்கள் இராஜாக்களாலும், குருசிரேஷ்டர்களாலும், சக்கரவர்த்திகளாலும், அபிமானிக்கப்பட்டனர். 'பிரான்ஸிஸ் டி பெடிவிஸ்' என்பவர் 'மிச்செல் ஆங்கிலோ' விடம் தொப்பியை இறக்காமல் ஒருக்காலும் பேசினதேயில்லை. டசன்கணக்கான பிரதானிகள் நிற்கும்பொழுது மூன்றாவது 'ஜூலியஸ்' என்பவர், அவரைப் பக்கத்தில் உட்காரும்படி செய்தனர். ஐந்தாவது சார்லஸ், திட்டியன் என்பவருக்கு வழிவிலக்கினர். அந்தச்சித்திரவேலைக்காரருடைய கையிலிருந்து சிறுதுடைப்பம் விழுந்தபொழுது "ஓர் சக்கரவர்த்தி உமக்கு ஊழியஞ்செய்யத்தகுதியுடையீர்" என்று சொல்லிக்குனிந்து அதை யெடுத்துக்கொடுத்தனர். 'ஆரியஸ்டோ'வினுடைய கவிதைகளைக் கிரந்தகர்த்தாவின் அனுமதியின்றி அச்சியற்றி விற்பவர்களைத் தீத்தண்ணீர் விலக்கிவைக்கிறதென்று பத்தாவது 'லியோ' பயமுறுத்தினர். ஒன்றாவது 'பிரான்ஸிஸ்' 'லியனார்டோ டாவின்சி'யின் மரணசயனத்தைப்போய்ப் பார்த்ததுபோல அதே போப்பும் ராபேயல் உடைய மரணசயனத்தைப்போய்ப் பார்த்தனர்.

'ஹேபிடன்' என்பவர் கானசாஸ்திரத்தில் தேர்ந்தவர்களைத் தவிர ஏனையர் ஒவ்வொருவராலும் தான் நேசிக்கப்பட்டு மதிக்கப்பட்டதாக ஒருக்கால் யூகமாய்ச்சொன்னபோதிலும் மிகவும் பெரிய கானசாஸ்திரிகளனைவரும் ஒருவர் மற்றொருவருடைய பெருமையை அங்கீகரிக்க மிக சித்தமாயிருந்தனர். 'ஹேபிட்ன்' என்பவர் அற்பமான பொறாமையினின்றும் முற்றிலும் விடுபட்டிருந்தவராகத்தோற்றுகிறது. பேர்போன 'போர்ப்போரா'வைப்பற்றிய அவருடைய மதிப்பானது அவருடைய வீட்டில் தன்னை வேலையாளாக அங்கீகரிக்கப்பெற்று ஊழியஞ்செய்யத் தீர்மானித்துக்கொண்டமட்டில் இருந்தது. போர்ப்போரா என்பவர் வசித்தகுடும்பத்தில் தன்னைப்பட்கஞ்செய்து கொண்டுதான் அந்தவேலையைச் செய்வதற்கு ஒப்புக்

கொள்ளப்பட்டனர். ஒவ்வொருநாளும் அதிகாலையில் 'போர்ப்போரா'வினுடைய மேற்சட்டையை சுத்திசெய்யவும் அவருடைய பாதரட்சைகளைத் துடைக்கவும், அவருடைய புழுதியடைந்த தொப்பியை ஒழுங்காய் வைக்கவும் அவர் ஜாக்கிரதையாயிருந்தனர். முதலில் போர்ப்போரா' என்பவர் 'ஹேய்டன்' விஷயத்தில் முறுமுறுத்தார். ஆனால் அவருடைய கொடூரமானது சீக்கிரம் சாந்தமாகி முடிவில் அன்பாக உருந்தெறது. அவர் சீக்கிரம் தன் வேலையாளுடைய யூகத்தைக்கண்டுபிடித்து அதைத்தன்னுடைய போதனையால், ஹேய்டன் முடிவில் மிகவும் கீர்த்திபெற்றதாகிய விஷயத்தில், திருப்பிவிட்டனர்.

(இன்னும் வரும்)

---

## அடியில் வரும் பிழைகளைத் திருத்திக்கொள்க.

| தொகுதி. | பகுதி. | பக். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|---|
| 5. | 2. | 80. | 18. | ஒடுங்கியதால் | ஒடுங்கியசால் |
| 5. | 5. | 263. | 3. | எழுத்தின் | ஒழுக்கத்தின் |
| ,, | ,, | ,, | 12. | பென்னின் அலர் | பெனின் மலர் |
| ,, | ,, | 265 | 13. | பைரவன் | பைரன் |
| ,, | ,, | 267. | 11. | ராஜா | ராஜ |

# "மதுரைஸ்தானீகர் வரலாறு."

(உஎஉ-ம்-பக்கத்தொடர்ச்சி.)

[பழைய ஏட்டிலுள்ளபடியே பதிப்பிக்கப்பட்டது.]

"அன்று முதல் கட்டியம் பெத்தவரய்யன் வகை சுந்தரேசுவரய்யனை ஸ்தலம் ஸ்தானீகர்களனைவரும் ஒப்புக்கொள்ள, பரிவட்டமுங்கட்டிக்கொண்டு காணியாட்சியாண்டு வருகிறார். இரண்டு கோவில் தேவபாராயணம் தெய்வபுரோகிதங்களுக்கு கேசவதீக்ஷதர் நியமனம் பண்ணுவித்திருந்த அப்புடுவாத்தியாரைத்தானே தம்முடைய மனிதராய்த்தொழில் செய்து வரச்சொல்லித் திட்டம் பண்ணுவித்து நடந்து வருகிறது. மங்கம்மனவர்கள் நாளையில் வடக்கேயிருந்து அநேகம் பிராமணர்களை வரவழைத்து அக்கிரகாரங்களும் சத்திரங்களும் சாலைதர்மங்களும் கோவில்பூஜை உற்சவாதிகளும் விசேஷமாயுண்டு பண்ணுவித்து நடப்பிவித்தார்கள். சுபானு(ஞு) வரைக்கும் மங்கம்மனவர்கள் ராஜ்ஜியமாண்டதில் ஒரு காரணத்தினாலே தெய்வீகமானார்கள்.

"பிறகு விஜயரெங்க முத்துசொக்கநாத நாயக்கனய்யனவர்கள் வெளியேறி, தாருண(ஞு) முதல் விரோதிகிருது (ஞு) வரைக்கும் ராஜ்ஜியமாண்டார்கள். அவர்கள் ராஜரீகத்திற் செய்த திருப்பணிகளுக்கும் திருவாபரணத்திற்கும் கணக்குண்டு. மத்தியிலே க்ஷயரோகம் வந்து நிராமல் விரோதிகிருது(ஞு) மாசிமீ சிவராத்திரி நாள் முதல்சாமத்தில் தெய்வீகமானார். விரோதிகிருது(ஞு) பங்குனிமீ முதல் சித்தார்த்தி(ஞு) வைகாசிமீ வரைக்கும் (ஞு)-எ-மீ ௲-ச்கு கர்த்தாக்கள் விஜயரெங்கசொக்கநாத நாயக்கரய்யனவர்கள் பட்டஸ்ரீ மீனாக்ஷியம்மனவர்கள் பட்டமாண்டார்கள். அவர்கள் சகோதரர் வெங்கிடபெருமாள் நாயக்கரையனவர்கள் ராஜ்ஜியபரிபாலனம் செய்தார்கள். அந்த முன்னிலையிற் கலாபமுண்டாய்க்கொஞ்சநாள் அராஜீகமுண்டானதில் தளவாய் நரசப்பய்யனவர்கள், திருமலைநாயக்கரையனவர்கள் வம்மிசத்தில் பங்காரு-திருமலைநாயக்கரைக் கூட்டிவந்து பட்டங்கட்டிவைத்துத் தம்முடைய குமாரன் முத்துசாமியய்

யனுக்குத் தளகர்த்தமுங் கொடுத்து ஒரு௵ ராஜ்ஜியமாண்டார்கள். மீனாக்ஷியம்மனவர்கள் பட்டயாளுகையில் பிரமோதூத௵ ஆவணி ௴ ௩௨ மதுரைக்கோட்டை கிட்டணோ வெங்கிடகிருஷ்ணமாவுத்தரவர்கள் நாளையில் விக்கிரம பாண்டிய பட்டராசாரிய அபிஷேகத்துக்கு அரமனைக்கு ௸-௫-பொன் யாவனையுங்கொடுத்து உத்தரவு வாங்கி நடப்பிவித்துக்கொண்டார். செண்பகசுந்தரபட்டர், ௸ குமாரன் சதாசிவபட்டர் ௸ தம்பி பிர்ம்மசாரி முத்துக்கலியாண சுந்தரபட்டர் அவர் குமாரன் சாமிநாதபட்டர், ௸ தம்பி பிர்ம்மசாரி செண்பகசுந்தரலிங்கபட்டர் மகன் பிர்ம்மசாரி—காணிக்கைக்காரர் ஜனம்—௫. நெட்டூரோரில் கற்பூரசுந்தரபட்டர் மகன், ௸ தமையன்மகன் ஆக ஏழுபேருக்கு உத்திரவாகும்போது, குலசேகர பட்டர் மறிக்க, அவர்களையெல்லாங்காவல் பண்ணுவித்துக்கொண்டு, அம்மன்கோவில் ஆறுசாற் பீடத்தில் ஆசாரிய அபிஷேகமுஞ்செய்து கொண்டார்கள்.

"குலசேகரபட்டர் வகையில் காவலில்வைத்திருந்த ஒருவரைக் கூட்டிவந்து பரிவட்டமுங் கட்டிக்கொண்டு பட்டணப்பிரவேசம் வந்தார்கள். காணிக்காரர்களுக்கு எட்டு முழத்திலொரு சோமன் பட்டு வீதம் சாத்துப்பொடி பழகினசோமன் பட்டு—௫. அர்ச்சகர்களுக்குச் சல்லாச்சோமன் ௨. இப்படிப்பரிவட்டங்கட்டிக்கொண்டு, நிறைவேற்றினபிறகு காவலிலிருந்தபேரை நீக்கிவிட்டார்கள். ஜனங்கள்போக மீதமாயுள்ள ஸ்தானிகர்களும் பரிஜனங்களுஞ்சுவாமியையெழுந்தருளிவித்துக்கொண்டு மதுரைநாயகர் ஸ்தலம் வந்துசேர்ந்து சேர்த்தியிலெழுந்தருளினர். கோவில் மூலஸ்தானமுதல் போக்குவரத்துப்பார்த்துத் திட்டம்செய்து மகா சம்பிரம வுற்சவத்திற்கு தூ-பொன்வரைக்குங் கொடுத்துச் சம்புரோக்ஷணையும் நடப்பிவைத்துப் பூஜையுஞ்சிறப்பாக நடப்பிவைத்து வந்தார். எடுபட்டுப்போன ஸ்தலத்தை முராரிராயர் உத்தரவுப்படி அப்பாச்சி நாயக்கரையனவர்கள் ஸ்தலத்தையுண்டு பண்ணுவித்தார். படாசாய்பு நாளையில் கொள்ளைபோனது போக நகை சட்டிமுட்டு இருப்புத்திட்டம் பண்ணுவித்ததிற்கும் கணக்குண்டு. சகாப்தம்-[illegible]-க்கு மேல் உரு தநிமோத்கார௵ ஆடி ௴ மாபூசிகானவர்களும், மப்மதல்ஜிகானவர்

களும் வந்து மராட்டியரை வெளிப்படுத்திச் சீமையைக் கட்டிக்கொ
ண்டு ராஜ்ஜியம் ஆண்டு வருகிறார்கள். இவ்வளவும் படாசாய்பு கலா
பந்தீர்ந்து வந்தபிறகு பழையகணக்குப்படிக்கு ஜீரணமாயிருந்ததுஞ்
சேர்த்து புதுப்பிவைத்தார்கள். (ஞாபகம்.)

“சுவாமி யாண்டவர் திருவாலவாயுடைய தம்பிரானார் திருக்
கோவில் திருவாபரணங்கள். நிச்சனத்தில் தங்கநகைகள் பொ
ன்னகைகள் செய்தால் தட்டானுக்குக்கூலி விராகன் க-க்கு ஊர்க்
கூலிபணம் கஇ-க்கு பாதிக்கூலி பணம் ஐ-கொடுக்கிறது. நகாசு
வேலைகளாக ஷை நகைகள் செய்தால் விராகன் க-க்குப்பணம்
உ-வீதம் ஊர்க்கூலிக்கு பாதி ஒருபணவீதம் கொடுக்கிறது. வெ
ள்ளி வேலைக்குச்சேதாரஞ் சேர்க்கிற சாதாவேலைக்கு ஊர்க்கூலி
பணம் சு-ம், நகாசு வேலைக்குப் பணம் அ-ம் ஆனதால், இதிற்பாதி
கூலியுள்ளதைக் கொடுக்கிறது. கரிதளவாடங்கள் தேவையானது
வாங்கிக்கொடுக்கிறது. பின்னால் கூலியிற் பிடித்துக்கொள்ளுகிறது.
குந்தள வேலைக்கு ஒருவிராகனெடை ச-பொன்தங்கம் போ
ட்டுச் செதுக்கினதின் பேரில் நகையின் பேரிற் சேர்ந்த ஈடு தங்கத்
துக்கு கருகூலத்திலிருந்து தங்கக்காசு கொடுத்து அதற்கு விராகன்
ஒன்றுக்கு உள்ளதிலே தள்ளி நின்ற பணத்தில் பாதிக்கூலி ஒத்துக்
கொடுக்கிறது. மூலாம் பூச்சுவேலைக்கு இந்தப்படி செய்கிறது. மீதி
நகைகள் பொன் தங்கம் வெள்ளியில் செய்தால் ஊரில் நடக்கிறது
போல பொன தங்கத்துக்குக் கால்மாத்தும் வெள்ளிக்கு அரைமாத்
தும் விளக்கணம்போட்டுச் செய்கிறதில் கோவிலுககுப்பொன் தங்க
த்துக்கு அரைக்கால்மாத்து விளக்கணமும், வெள்ளிக்குக்கால்மாத்து
மாகளுப்புவிக்கிறது. சேதாரம்பொன் தங்கவேலைககு விராகனொன்று
க்கு நெல்லெடையொத்துக் கொடுக்கிறது. பொன் தங்கத்துக்குப்
பொடி கூட்டுகிறதிட்டமொரு நகைக்கொரு விராகனெடை பொடி
செல்மானம் உடல்தங்கம் பொன் விராகன் ஒன்றுக்கு காற்பணவெ
டை மட்டங்கூட்டிப் பொடிசேர்க்கிறது. இதுகால்மாத்திறங்கும்.
கோவிலுக்கு அரைக்காற்பண எடை வீதம் பொடிகூட்டுகிறது. ரா
விப்பொடிகூட்டினால் ஒரு நெல்லெடை செம்புபோட்டுப் பொடிகூ
ட்டுகிறது. வெள்ளிக்கு ஏழுபங்கு வெள்ளியும், ஒருபங்கு பித்தளை

யும் கூட்டிப்பொடி கூட்டுகிறது. சேதாரம் சேர்க்கிறவிதம் ஒத்துக்கொடுக்கிறது. இந்தப்படிக்குக் கன்னன் மங்கைபாகமாசாரியும், கட்டான் சொக்கனாசாரியும் உடன்படிக்கையெழுதிக்கொடுத்த பட்டயம் கருகூலத்திலிருப்பதாலந்தப்படி நடப்பிவிக்கவும்.

"சுவாமியுடையவர் திருவாலவாயுடைய தம்பிரானார் திருக்கோவில் (ஞாபகம்) சீதளபுஸ்தகம் கூ-ஷு-த்துக்கு இருக்கும். ஸ்தலத்தார் வரலாறு ஏடு கக. ஸ்தலத்தார் பரிஜனங்கள் தொழிலட்டவணை ஏடு கூரு. சொக்கநாத நாயக்கர் நாளையில் ஸ்தலத்தார் பரிஜனங்களுக்கு விட்டுக்கொடுத்த கிராம அட்டவணையேடு ச. கோவில் வாசலில், சுவதந்திரம் சாதம், தீர்த்தம், பரிவட்டமுதல் வினியோகதிட்டம்-ஏடு-ச. ஸ்தலத்தார் பரிஜனங்கள் செய்தொழிலுக்கு துரத்துவிதம் மனுஷர் நியமித்துப்பார்க்கிற திட்டம், ஏடு ரு. மீனாக்ஷியம்மன் நாளையில் திட்டம்பண்ணின கிராம அட்டவணை ஏடு ரு. திருப்பணிகளுண்டான திட்டமேடு-கூ. உற்சவங்களுண்டான திட்டமேடு-க காவல்காரகிற திட்டமேடு கூ. ராஜ்ஜியம் ஆண்டதுரைகள் வரலாறு ஏடு கூ. ஆக ஞாபகப்புஸ்தக வகையறு ஏடு எச. இந்த ஞாபகப்புஸ்தகத்தை கருகூலக்கணக்கறையில் பத்திரப்படுத்தி வைத்திருக்கவும். ஸ்தலத்தார் பரிஜனங்களுக்குள்ளே விவகாரங்கள் வந்து நிலைமைக்காரியங்களில் சமுசயம் வந்தால் தீராதபக்ஷம் அரமனையுத்திரவானால் ஸ்தலத்தாரேழுபேரையும் கூடவைத்துக்கொண்டு இந்தபுஸ்தகத்திலெது பார்க்கவேணுமோ அது பார்த்து அதிலிருக்கிறபடிக்குத் தீர்த்துப்போடுகிறது. எந்தவேளையிலென்ன சமாசாரம்கேட்கிறார்களோ அதைமட்டும்பார்த்து அந்தப்படியே யெதிரிடைபெழுதிப்போய்ச்சொல்லுகிற மற்றசகருமானங்கள் ஒருவருக்கும் காண்பிவியாமல், கருக்காய்க்கொண்டுவந்தால் கணக்குப்பிள்ளையிடத்தில் சகலத்திராளுக்கும் கண்ணியமுண்டாருமானதால், கணக்கறையிற் பத்திரப்படுத்தி எதுகாரியமும் அங்கவிடத்திலிருந்து பார்த்துச்சொன்னால் ஸ்தலமுமரமனையும் ஒப்புக்கொள்ளும்; இப்படியே நிலைமையிலிருக்கிறவர்களறிந்து கொள்ளவும்.

"சுவாமியுடையவர் திருவாலவாயுடைய தம்பிரானார் கோவில் பரிஜனங்கள் செய்தொழிலட்டவணை.—நாலாம் புதுக்கன்பழைய

*

கணக்குப்படிக்கு, முதல்நிர்வாகம் சதாசிவபட்டரான விக்கிரமபாண்டியபட்டர் நம்பி செய்தொழில் மூலபுரம் பிரதான உள்சன்னதிக்கு நித்தியப்படி யபிஷேகம் அலங்காரம் அர்ச்சனை நைவேத்தியம், தீபாராதனை சகல உபசாரமும், ஆறுகாலத்திலுஞ்செய்கிறது. மாறியாடுவார், உற்சவமூர்த்தி, இளையநயினார் முதலான பிரதான சன்னதிகளுக்கு நைவேத்தியம்; தீபாராதனை நடு நாளுஞ் செய்கிறது. சௌராதி சண்டபரியந்தம் உண்டாகிய சுற்றுக்கோவில்களுக்கெல்லாம், முதல்தேதிமுதல் கடு-ம்தேதி வரைக்கும் அபிஷேக அலங்காரம் தீபாராதனை செய்கிறது. இளையநயினருக்கு உற்சவங்கள் வந்தால் கொடியேற்றம் பண்ணி யாகசாலைமுதலான மந்திரகர்மங்கள் எல்லாம் ஆகமத்தின்படிக்குச் செய்கிறது. அஷ்டபந்தனம், செடிபந்தனம், விமானப்பிரதிஷ்டை, சாந்தி, சம்புரோக்ஷணைகள் முதலானதெல்லாஞ் செய்கிறது. அதில் வருகிற பிரயோசனத்தைச் சதாசிவபட்டருடனே மூன்றுபங்கும், சக்கரவர்த்திகளுக்கு ஒருபங்கும், ஙச-நிருவாகிகளுக்கொருபங்கும் ஆறு பங்கும் இந்தப்பிரகாரம் அவரவர் அனுபவித்துக்கொண்டு வருகிறது. நித்தியோற்சவம், மாசோற்சவம், வருஷோற்சவாதிகளுக்கும், விசேஷப்படிகளுக்குங் கையாட்சிக்கு மனுஷாள் நியமித்துக்கருகூலந்திறந்து தேவையான ஆடையாபரண மெடுத்துக்கொடுக்கிறது. அரமனைவாசற் பெரியதனம் பண்ணுகிறது. நன்மைதருவார்கோவிற்கு சொந்தத்திற் பூஜைபண்ணுகிறது. அங்கம் வெட்டுகிற திருவிளையாடலும், வளையல் விற்பதும், பிட்டுக்குமண் சுமப்பதும் இந்த மூன்று திருவிளையாடலுஞ் சொந்தத்தில் செய்கிறது. தென்திருவாலவாயன், வடதிருவாலவாயன் முதலான வெளிப்பட்ட கோவில்களெல்லாம், க-ஆந்தேதிமுதல், யரு-ஆந்தேதி வரைக்கும் பூஜைபண்ணி வருகிறது. மூலபுரம், இரண்டுசன்னதிக்கும் பரிசாரகம் யஅ-நாள் வட்டமாய்ச்செய்துவருகிறது. திக்குவிஜயம், திருக்கலியாணம, பட்டாபிஷேகம் இவையெல்லா மிருவகைப் பட்டமாருஞ் செய்விக்கிறது. துரைக்குச் செங்கோலிருவகைப் பேருமெடுத்துக்கொடுக்கிறது. தையலாளுக்குச் சுவாமி கோவிலாறுகாற்பீடத்தில் நம்பியார் பொட்டுக்கட்டுகிறது. பூஜைபண்ணுகிற பேர்கள் வாலிபத்தில் வேதம், ஆகமசாஸ்திரங்களெல்லாம் படித்துக் குருக்களிடத்தில்

பரீக்ஷைகொடுத்து விவாகமானதின்பேரில் காணிக்காரர் அம்மன்கோ
விலாறுகாற்பீடத்தில் ஆசாரியவபிஷேகம்பண்ணிக்கொண்டு பூஜை
பண்ணிவருகிறது. அந்தந்தமுறைக்கு அவரவர் ஆசாரமாய்க்கை
யாடுகிறதேயல்லாமல் வேறொருவர் கைகலக்கப்படாது. துரைதள
வாய் இரண்டுவகைப்பேருடைய அர்ச்சனைமட்டும் பண்ணிவரு
கிறது. வாகன ஏற்றம் ஏழாந்திருநாள் கரியுரித்தவாகன ஏற்றமும்
௯-ம் திருவிழா சமணர்களுக்கு விபூதிபோட இடபவாகன ஏற்றமுந்
திருக்கலியாணத்திற் பாதப்பிரக்ஷாளணம், மண்சாத்தல் இதுமுத
லான வாகனஏற்றமுமுண்டு. சப்பிரம் ரதத்தில் வாகனஏற்றமுமுண்டு.
இரண்டு கோவிலுக்கும், அர்த்தமண்டபம் வரைக்கும் காவல் பரிசா
ரகம் வட்டம்வீதங்காக்கிறது. அதிற் பாத்திரந் தட்டுமுட்டுப் பரிவட்
டம் நகைநாணயம் சொத்தியம் சேதம்வந்தால் கருகூலக்கணக்குப்
படிக்குக்கையாட்சிக்காரருக் கேற்கச்சம்மதி பண்ணுவிக்கிறது. உண்
டியல் வாசலில் மனுஷாள் நியமித்து வட்டம் பதினொருநாளைக்கும் உ
ண்டியல் வைத்துக்காத்திருந்து காணிக்கைகள் வருகிறதை அரமனை
யிற் கொண்டுவந்து முதலிட்டு, பணமாய் வந்திருப்பதற்குப் பத்துக்கி
ரண்டு பணவீதஞ் சுதந்திரம் வாங்கிக்கொள்ளுகிறது. வராகன், ரூபா,
தங்கம், வெள்ளி, நகை, நாணயங்கள், பரிவட்டங்கள் வந்தால் கணக்
கிலெழுதிவைத்துக் கையாட்சிக்காரரிடத்திலொப்புவித்துக் கருகூல
ஞ்சேரப்பண்ணுவிக்கிறது. வட்டந்திரும்புகிறபோது கையாட்சிக்
காரர்-௯-பேர் முன்னிலைக்கு, மறுவட்டஞ் சக்கரவர்த்திகள் வழியில்
சகலபண்டபதார்த்தம், ஆடையாபரணாதிகள் கணக்காசாரப்படிக்கு
ஒப்புக்கொடுக்கிறது. திருப்பணிக்காரியமும் நடக்கிறதைக் கணிசம்
விசாரித்துக்கொள்கிறது. குடையறை, பல்லக்கறை, வாகன அறை,
பரிவட்டஅறை, பசுப்புரை, தீவர்த்தியறை, தளவாடஅறை சகல
மும் மாசம், ஒருமுறை கையாட்சிக்காரர்கூட இருந்து திட்டக்கணக்
காசாரத்துக்குச் சரிபார்த்துக்கொள்ளுகிறது. அந்தந்தத் தொழி
லுக்கு நியமித்திருக்கும் மனுஷரைக்கொண்டு சொத்தியங்கள்
வராமற் சாவதானப்படுத்தச் சொல்லுகிறது. அதிலேதாகிலுஞ்
சொத்தியங்கள் வந்தால் அந்தத்தொழில் செய்கிறவனிடத்திலறிவிக்
கிறது. உள்பரிசாரகவட்டம் பதினொருநாளைக்கும் கெர்ப்பக்கிரக
முதல் அர்த்தமண்டபம் வரைக்கும் தூர்வையும், ஜலசுத்தியும், திரு

விளக்கும் போட்டுத் திருமேனிக்காவலுங் காத்திருந்து, தெரிசனத்திற்கு வருகிறபேர்களுக்கு தீர்த்தப்பிரசாதமுங்கொடுத்துக்கொண்டு சன்னதியிலே காத்திருக்கிறது. உண்டியல் வாசலுக்கு வட்டம் வீதம் பிராமணனை நியமித்துப் பாத்திரந் தட்டுமுட்டுகளெல்லாம் அன்றாடகந்தேய்த்துச் சுத்திபண்ணி வைக்கிறது. சன்னதிவிநியோகத்திற்குச் செல்லும் விபூதி கொண்டுவந்து போடுகிறது. உற்சவாதிகளில் உற்சவமூர்த்தி இளையநயினாருக்கு ரெக்ஷைசாத்துகிறது. தீபாராதனைகாலத்தில் மந்திரபுஷ்பம் அர்ச்சனை பண்ணுகிறது. ஸ்தபனம் வைத்துக் கும்பாபிஷேகஞ்செய்கிறது. பருப்பு, வடை முப்பழமிவை யெல்லாம் மூலம் இரண்டுசென்னதிக்குஞ் சாத்துகிறது. விநாயகர்முதல் பரிவார தேவதைகள் சந்நிதிக்கெல்லாம் தங்கள் வட்டமாயிருந்தால் சாத்துகிறது. ஸ்திரீ இல்லாதபேர், அங்கஹீனமான பேர், நோயாளிகளொருவரும் திருமேனியைத்தொட்டுப் பூஜைபண்ணப்படாது. திருவிளையாடல் செய்யப்படாது. இதைவிட அரயனையார் என்ன தொழில் செய்யச்சொன்னாலுஞ் செய்கிறது. இவ்வளவும் முதல் திருவாகம் சதாசிவபட்டர் நம்பி செய்தொழில். இவர்க்கு திருமலைசவுரி ஐயனவர்கள் நாளையில் விக்கிரமபாண்டிய பட்டரென்று பேர்கொடுத்தார்கள்.

முற்றிற்று.

---

## ஓர் குறிப்பு.

நன்னூலையும் அதன் ஆக்கியோனையும் பற்றி நான் கொஞ்சக் காலத்துக்குமுன் எழுதிய விஷயத்தில், நன்னூலாசிரியராகிய பவணந்தி முனிவரிருந்த ஊர் இன்னவிடமிருக்கிறதென்று விளங்கவில்லையென்று எழுதினேன். ஆனால், இவரூராகிய சனகை என்பது ஜனநாதபுரம் என்பதின் குறுக்கலென்பதற்கு ஐயமில்லை. அப்படியாயின் இது காவேரி வடகரையிலுள்ள மாயிலங்கையாக வேண்டும். இம்மாயிலங்கை இப்பொழுது மைசூர்ஜில்லா திருமுக்கூடல் நரசிபுரம் தாலுக்காவைச் சேர்ந்த கிராமம். இது கங்கராஜ்யத்திலேயே யிருக்

கிறது. இதற்கும் கங்கநாட்டுப் பழய ராஜதானியாகிய தழைக்காட்டுக்கும் இடையில் காவேரிதானுள்ளது. இதைக்குறித்துச் சாஸனங்களில் அடியில் வருமாறு இருக்கின்றன:---

(1) முடிகொண்டசோழமண்டலத்து கங்கைகொண்ட சோழவளநாட்டு இடைநாட்டு ஜனநாதபுரத்து.

(2) கங்கபாடியான முடிகொண்ட சோழமண்டலத்துத் தென்கரை இடைநாட்டு மாயிலங்கையான ஜனநாதபுரத்து.

(3) கங்கபாடி தென்கரை இடைநாட்டு மாயிலங்கை.

(4) பெரியநாட்டு மாயிலங்கையான ஜனநாதபுரத்து.

மேலெடுத்துக் காட்டிய சாஸனப் பகுதிகளால் மாயிலங்கையே கங்கநாட்டிலிருப்பதினாலும், ஜனநாதபுரமென்று பெயர் பெற்றிருத்தலாலும் பவணந்தியினூராகிய சனகையாயிருக்கலா மென்று எண்ணப்படுகிறது.

து. அ. கோபிநாதராவ்.

## மாட்சிதங்கிய பரோடாமகாராஜா அவர்கள் கைத்தொழிலைப்பற்றிச் செய்த

# மகோபந்நியாசம்.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY MADRAS.

(முற்றொடர்ச்சி.)

ஜனங்களே பார்த்துவரவேண்டிய கைத்தொழில் வேலைகளை அரசாங்கத்தாரே அநுவசியமாய் எடுத்து நடத்திவந்ததினால், அவ்வேலைகளில் ஜனங்கட்குப் பழக்க மேற்படாமலும் அவர்களே நிர்வகித்துப்பார்க்குந் திறமையுண்டாகாமலும் போகநேரிட்டது. இவற்றோடு, நாணயம் சரியாய் வழங்கி வராததனாலும், பட்டாள உபத்திரவம் அதிகமாயிருந்தபடியாலும் விவசாயிகள் தத்தம்உழவுவேலையை விட்டுவிடவும், வியாபாரி நாணயசாலையினின்று நீங்கவும் நேரிட்டன. ஜனங்கள் தங்கள் சாப்பாட்டுக்கு வேண்டிய தானியத்துக்கு லீஸருடைய கிருபையை எதிர்பார்க்க வேண்டியிருந்தது. அவர்ன்

மென்ட் கஜானாவிலிருந்தே ஏழைகளுக்கு போஜனப்பொருள் அளிக்கப்பட்டு வந்தது. சக்கிரவர்த்தி ஆயுதபலத்தாலேயே ஆண்டு வந்தார். ஜனங்கள் கவர்ன்மெண்ட் நிர்ப்பந்தத்துக்குப் பயந்தே கைத்தொழில் வேலை செய்துவந்தார்கள். ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் கேள்விகேட்பாரில்லாது சோம்பேறிகளாயும் செய்யத்தகாதன செய்பவர்களாயும் ஆனார்கள். ஜனங்கள் மேன்மேற் பெருகும் தரித்திரத்தையும் மனத்தளர்ச்சியையும் பெற்றார்கள். இவ்வகையாக தேச ஒற்றுமை, அபிமானங்கள் ஒழியப் பெற்றமையால், வடக்கேயிருந்து கொள்ளையடிக்கும் கூட்டப்படைகள் இலகுவாய் ரோமராஜ்யத்தை யழித்துவிட நேரிட்டது.

## தற்கால க்ஷேமத்துக்கு ஒன்றியுழைத்தல்.

ரோமாபுரி நிலைகெட்டு அழிந்ததின் காரணத்தை மறவாது மனதில் வைத்துக்கொண்டு நம் தேசம் விடுதலைப்படுவதற்கேற்ற சிறந்த முறைகளைத் தேடவேண்டும். நாம் எக்காலத்திலும் நல்ல நிலைமையிலேயேயிருந்து வரவேண்டுமானால், ஜனங்களுக்கு அவரவர்கள் செய்யவேண்டிய கடமைகளையும் அவர்களாலே தான் தேசத்துக்கு நிலைமையும் கௌரவமும் உண்டாகும் என்ற மெய்யுணர்வையும் போதிக்கவேண்டும். உயர்ந்த கல்வியும் ஐசுவரியமும் உள்ளவர்கள் தாழ்ந்தநிலைமையிலுள்ளவர்களை ஊக்கப்படுத்தியும், கல்வி புகட்டியும் மற்றும் உரியகடமைகளை மேற்கொள்ளவும் வேண்டும். செயலற்றுக் கிடப்பவர் தம்மைத்தாமே காப்பாற்றிக்கொள்ளும் சக்தி வரும்வரையில்தான், அவர்களுக்கு நாம் உதவிசெய்யவேண்டும். அதற்கப்பால் தங்களையே சார்ந்துவரும்படி அவர்களை விட்டுவிடவேண்டும்.

நாம் கூடியசீக்கிரத்தில் தேசச்செல்வநூலாதார விதிகளை (Principles of economics) சரிவரக் கற்கவேண்டும். நாணயம், புத்திகூர்மை, தொழின்முயற்சி முதலிய சக்தியுடையவர்கள் பெரியகைத்தொழில்களை யெடுத்துநடத்தி வரும்படி ஊக்கிவரவேண்டும்.

## இந்தியாவும் புதிதாகக்கண்டுபிடிக்கப்பட்ட யந்திரங்களும்.

பூர்வீக இந்தியாவும் நமக்குச்சில படிப்பினைகளைப் புகட்டுகின்றது. இந்தியா பிராசீனகாலத்தில் ரோமுடனோடு செய்த தீவிர

மான வியாபாரத்தைப்பற்றியும், அதன் விலையுயர்ந்த விளைபொருள்களைப் பற்றியும் முன்னமே ஆரம்பத்தில் சொல்லியிருக்கிறேன். ஆனால்,நம்தேசத்தில்,மேற்குறித்த பழைய காலத்திலே இயந்திரத்தேர்ச்சி அதிகமாயில்லை. ஏனென்றால் புத்திக்கூர்மையில்லாத தாழ்ந்த ஜாதியாரிடம் இயந்திரத்தைக் கையாளுதல் விட்டுவிடப்பட்டது. தற்கால சிற்பசித்திரவேலைகள் பூர்வகிரேக்கரது வேலைநயத்தோடு ஒப்பிடத்தக்கவையல்ல. உலகத்தின் உயர்தரஜாதியாரென்று மதிக்கப்படுபவர்கள், இயந்திரத்தில் அடைந்துள்ள தேர்ச்சியை நாமும் பின்பற்றிப் பிடிக்கமுடியவில்லை. இதற்குக்காரணம் என்னவென்றால், உயர்ந்த புத்திகூர்மையுள்ள ஜாதியார்கள் இயந்திரங்களைத்தாங்களே கையாளுதலைவிட்டு, அவ்வளவுசாமர்த்தியமும் புத்திக்கூர்மையும்போதாத சாமான்யஜாதியார் அவற்றைச்செய்துவர விட்டுவிட்டதேயாம். நாம் பாஷாஞானத்திலும், சூக்ஷ்ம அறிவு முதிர்ச்சியிலும் உலகத்தின் மற்றெந்த மேலான ஜாதியாருக்கும் பிந்தினவரல்ல. நம்மிடம் தொழிற்சாமர்த்தியமும் இல்லாமல் போகவில்லை. அது இருக்கிறதென்பதைத் தாழ்ந்த தொழிலாளிகளிடமுள்ள புத்திநுட்பத்தாலும் சாமர்த்தியத்தொழிலாலும் அறிந்துகொள்ளுகிறோம். தொழில் செய்வதற்கென்று குறிப்பிட்டஜாதியாரேயன்றி, பொதுவாய் தேசத்தாரெல்லோரும் கைத்தொழிலைக் கற்றுவரவேண்டும். தம் இளம்பருவத்திலேயே, பிராமணப்பிள்ளைகளும், படித்த மௌல்வி (moulvies) களது பிள்ளைகளும் தொழிற்கருவிகளை உபயோகிக்கும் முறையைக்கற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வோர் உயர்தர வித்தியார்த்தியும் (graduates) உத்தியோகத்தையே நாடிச் செல்வதை நிறுத்தி, கைத்தொழில்வேலையில் அமர்ந்துவரவேண்டும். அப்படிச்செய்துவருவாராகில் நம் தேசத்தார் பாஷாஞான முதிர்ச்சியில் பேர்போனவராயிருப்பதுபோல், கைத்தொழில் இயந்திரவேலையிலும் அவ்வாறேயாவார்கள் என்பதில் ஐயமில்லை.

## தற்காலத்து நான்கு முக்கிய ஏற்பாடுகள்.

தற்காலத்தில் மேனாட்டார் அடைந்திருக்கும் உன்னதபதவியைப்பார்த்து நாம் அநேகபடிப்பினைகள் படித்துக்கொள்ளுகிறோம், ..னறு பல நூற்றாண்டுகளின் சரித்திரத்தைத் திருப்பப்பார்க்கும்

பொழுது, மேனாட்டு ஜாதியார் அக்கால அளவுக்குள்ளேயே அந்த காரத்தினின்றும் வெளிப்போந்து தற்காலத்தில் மேலான நாகரீக பதவியடைந்திருப்பதை நாம் பார்க்கிறோமல்லவா? அவ்வித மாறுதலுக்குக் காரணமாயிருப்பவை நான்கு முக்கிய ஏற்பாடுகளேயாம்.

**கைத்தொழிலை மேற்கொண்டு நடத்துவதற்கு இன்றியமையாத முதல் மிகுந்திருத்தல்.**

சென்ற சில நூற்றாண்டுகளாக முதலைப்பிரயோகிக்கும் முறை (Captalistic programme) ஒழுங்குபட்டு நடந்துவருகின்றது. 'முதல் முறை' சம்பந்தப்பட்ட நாணய ஒழுங்கு, நாணயச்சாலைகள் (Banks), நாணயமாற்றுச்சாலைகள் (Exchanges) முதலியவற்றால் உண்டாகும் நன்மைகளைப்பற்றி, நான் விவரித்துச் சொல்லவேண்டுவதில்லை. முதல்களை சாஸ்திரீயமாய் எப்படி உபயோகப்படுத்துவதென்பதைக் கற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது.

இதற்காக நம்முடைய கலாசாலைகளிலும் தேசச்செல்வ அபிவிருத்தி சாஸ்திர (Economics) த்தை முன்னுக்குக் கொண்டுவருவதற்கென்று, ஏராளமான பணத்தை உபயோகித்து வரவேண்டும். நம் வாலிபர்கள் அந்தசாஸ்திரத்தை சரிவர அறிந்துகொள்ளவேண்டும். மேற்குறித்த சாஸ்திரத்தின் நுணுக்கத்தை யறிவதற்கென்று வாலிபர்கள் மேனாட்டுச் சர்வகலாசாலைகளுக்குப் போய்க் கற்றுவரவேண்டும்.

இரண்டாவது 'கிளர்ச்சி.'

இக்கிளர்ச்சி மேனாட்டில் தொடங்குவதற்குமுன், அங்குள்ள வைதீகக் குருக்கண்மார் ராஜாங்க விஷயங்களிலும், வியாபார விஷயத்திலும், மற்றைய லௌகீக விஷயங்களிலும், அனாவசியமாய்த் தலையிட்டுவந்தார்கள். அதைத்தடுத்து ஒழிப்பதற்கென்றே இக்'கிளர்ச்சி' எழுந்தது. கி. பி. 13-ம் நூற்றாண்டில் ரோமாபுரிக்கோவில் திருச்சபையார் (Church of Home) வைதீக விஷயங்களில் மாத்திரம் பிரவேசிக்கவேண்டியிருக்க, அதோடு லௌகீக விஷயங்களிலும் தலைநுழைத்து வந்தார்கள். ஜனங்கள் அதை நிறுத்த மூன்று நூற்றாண்டாக முயன்றுவந்தார்கள். அப்பாற்றான் மார்ட்டின் லூதர் (Martin Luther) என்பவர் தோன்றி அவ்விதத்தொடர்பை எதி

ர்த்து முறித்து ஒழிக்கலானார். அதுமுதற்கொண்டே, அத்திருச் சன்பயார் வைதீகவிஷயங்களில் பிரவேசிக்கலாமேயொழிய லௌகீகவிஷயங்களில் அவர்க்கு யாதொரு சம்பந்தமுமில்லையென்பது ஏற்பட்டு அப்படியே நடந்துவருகின்றது. இவ்விஷய சம்பந்தமாய் நான் குறித்துச் சொல்வதென்னவென்றால், இந்தியாவிலும் மதசம்பந்தப்பட்ட இடையூறுகள் பலப்பட்டிருப்பதாற்றான், அவை, சிறந்த புத்தியுள்ள பெரியோர்கள் லௌகீக விஷயங்களைத் தக்கபடிகவனிக்காமலும் தேசச்செல்வமுறைகளைக் கற்றுத் தேர்ச்சியடையாமலும் தடுத்து வருகின்றன என்பதே.

இந்திய ஜாதியார், மேனாட்டுக் கைத்தொழில் ஒழுங்குபற்றிய சாஸ்திர நூலாதார முறைகளை இதுவரை கற்றுக்கொள்ளாது சும்மாவிருந்ததற்குக் காரணமென்ன? இதற்குக் காரணம் நான் ஒருவாறு சொல்லுகிறேன்:—'நாம் ஜாதிமதஆசாரங்களின் உண்மையை அறிந்துகொள்ளாததே'

உயர்ந்த ஜாதிகளுக்கே மேலான சுதந்தரவுரிமைகளிருக்கின்றனவென்றும் அவை யாவருக்கும் கிடைக்கமாட்டா என்றும் கொண்டுள்ள தப்பெண்ணத்தைத் தவிருங்கள். அப்படிப்பட்ட உரிமைகளை அவர்கள் தாமே வகித்துக்கொண்டதன்றி, அவை அவர்கள் உடன்பிறந்தவை என்று எண்ணவேண்டாம். எப்படி ஒரு ஜாதியார் தாங்கள் பிறக்கும்போதே கொண்டுவராமல் தத்தம் ஊக்கத்தாலேயே வியாபாரமேன்மையையும், ராஜ்யப்பெருமையையும் அடைகிறார்களோ அப்படியே மேற்கூறிய உரிமைகளும் ஆகும். தன்னை மறந்து, பொதுநலம் கருதும் விசாலஎண்ணத்தை (Luxury of self-sacrifice) படையுங்கள். கீழ்நிலைமையிலிருப்பவர்களை மேல் உயர்த்தி விடுங்கள். விருப்பு வெறுப்பாகிய மனக்கோணல்களைச் செப்பனிடுங்கள். வெறும்பேச்சுப் பேசிக் காலத்தைக்கழிப்பதைக்காட்டிலும், செய்து, மாதிரி காட்டுங்கள்.

## தேசாபிமான விருத்தி.

ஐரோப்பாவில் மேற்கூறிய தேசாபிமானம் பலப்பட்டிருக்கிறது. ஐரோப்பா முழுவதிலும் 2000-வருடகாலமாக தோன்றி ஒவ்

பொழுது, மேனாட்டு ஜாதியார் அக்கால அளவுக்குள்ளேயே அந்த காரத்தினின்றும் வெளிப்போந்து தற்காலத்தில் மேலான நாகரீக பதவியடைந்திருப்பதை நாம் பார்க்கிறோமல்லவா? அவ்வித மாறுதலுக்குக் காரணமாயிருப்பவை நான்கு முக்கிய ஏற்பாடுகளேயாம்.

## கைத்தொழிலை மேற்கொண்டு நடத்துவதற்கு இன்றியமையாத முதல் மிகுந்திருத்தல்.

சென்ற சில நூற்றாண்டுகளாக முதலைப்பிரயோகிக்கும் முறை (Captalistic programme) ஒழுங்குபட்டு நடந்துவருகின்றது. 'முதல் முறை' சம்பந்தப்பட்ட நாணய ஒழுங்கு, நாணயச்சாலைகள் (Banks), நாணயமாற்றுச்சாலைகள் (Exchanges) முதலியவற்றால் உண்டாகும் நன்மைகளைப்பற்றி, நான் விவரித்துச் சொல்லவேண்டுவதில்லை. முதல்களை சாஸ்திரியமாய் எப்படி உபயோகப்படுத்துவதென்பதைக் கற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது.

இதற்காக நம்முடைய கலாசாலைகளிலும் தேசச்செல்வ அபிவிருத்தி சாஸ்திர (Economics) த்தை முன்னுக்குக் கொண்டுவருவதற்கென்று, ஏராளமான பணத்தை உபயோகித்து வரவேண்டும். நம் வாலிபர்கள் அந்தசாஸ்திரத்தை சரிவர அறிந்துகொள்ளவேண்டும். மேற்குறித்த சாஸ்திரத்தின் நுணுக்கத்தையறிவதற்கென்று வாலிபர்கள் மேனாட்டுச் சர்வகலாசாலைகளுக்குப் போய்க் கற்றுவரவேண்டும்.

## இரண்டாவது 'கிளர்ச்சி.'

இக்கிளர்ச்சி மேனாட்டில் தொடங்குவதற்குமுன், அங்குள்ள வைதீகக் குருக்கள்மார் ராஜாங்க விஷயங்களிலும், வியாபார விஷயத்திலும், மற்றைய லௌகீக விஷயங்களிலும், அனாவசியமாய்த் தலையிட்டுவந்தார்கள். அதைத்தடுத்து ஒழிப்பதற்கென்றே இக்'கிளர்ச்சி' எழுந்தது. கி. பி. 13-ம் நூற்றாண்டில் ரோமாபுரிக்கோவில் திருச்சபையார் (Church of Home) வைதீக விஷயங்களில் மாத்திரம் பிரவேசிக்கவேண்டியிருக்க, அதோடு லௌகீக விஷயங்களிலும் தலைநுழைத்து வந்தார்கள். ஜனங்கள் அதை நிறுத்த மூன்று நூற்றாண்டாக முயன்றுவந்தார்கள். அப்பால்தான் மார்ட்டின் லூதர் (Martin Luther) என்பவர் தோன்றி அவ்விதத்தொடர்பை எதி

ர்த்து முறித்து ஒழிக்கலானூர். அதுமுதற்கொண்டே, அத்திருச் சபையார் வைதீகவிஷயங்களில் பிரவேசிக்கலாமேயொழிய லௌகீகவிஷயங்களில் அவர்க்கு யாதொரு சம்பந்தமுமில்லையென்பது ஏற்பட்டு அப்படியே நடந்துவருகின்றது. இவ்விஷய சம்பந்தமாய் நான் குறித்துச் சொல்வதென்னவென்றால், இந்தியாவிலும் மதசம்பந்தப்பட்ட இடையூறுகள் பலப்பட்டிருப்பதாற்றான், அவை, சிறந்த புத்தியுள்ள பெரியோர்கள் லௌகீக விஷயங்களைத் தக்கபடிகவனிக்காமலும தேசச்செல்வமுறைகளைக் கற்றுத் தேர்ச்சியடையாமலும் தடுத்து வருகின்றன என்பதே.

இந்திய ஜாதியார், மேனாட்டுக் கைத்தொழில் ஒழுங்குபற்றிய சாஸ்திர நூலாதார முறைகளை இதுவரை கற்றுக்கொள்ளாது சும்மாவிருந்ததற்குக் காரணமென்ன? இதற்குக் காரணம் நான் ஒருவாறு சொல்லுகிறேன்:—‘நாம் ஜாதிமதஆசாரங்களின் உண்மையை அறிந்துகொள்ளாததே’

உயர்ந்த ஜாதிகளுக்கே மேலான சுதந்தரவுரிமைகளிருக்கின்றனவென்றும் அவை யாவருக்கும் கிடைக்கமாட்டா என்றும் கொண்டுள்ள தப்பெண்ணத்தைத் தவிருங்கள். அப்படிப்பட்ட உரிமைகளை அவர்கள் தாமே வகித்துக்கொண்டதன்றி, அவை அவர்கள் உடன்பிறந்தவை என்று எண்ணவேண்டாம். எப்படி ஒரு ஜாதியார் தாங்கள் பிறக்கும்போதே கொண்டுவராமல் தத்தம் ஊக்கத்தாலேயே வியாபாரமேன்மையையும், ராஜ்யப்பெருமையையும் அடைகிறார்களோ அப்படியே மேற்கூறிய உரிமைகளும் ஆகும். தன்னை மறந்து, பொதுநலம் கருதும் விசாலஎண்ணத்தை (Luxury of self-sacrifice) படையுங்கள். கீழ்நிலைமையிலிருப்பவர்களை மேல் உயர்த்தி விடுங்கள். விருப்பு வெறுப்பாகிய மனக்கோணல்களைச் செப்பனிடுங்கள். வெறும்பேச்சுப் பேசிக் காலத்தைக்கழிப்பதைக்காட்டிலும், செய்து, மாதிரி காட்டுங்கள்.

## தேசாபிமான விருத்தி.

ஐரோப்பாவில் மேற்கூறிய தேசாபிமானம் பலப்பட்டிருக்கிறது. ஐரோப்பா முழுவதிலும் 2000-வருடகாலமாக தோன்றி ஒவ்

வொரு தனிமைப்பட்ட ஜாதியும் ஐக்கியப்பட்டுப் பலப்படுவதற்கான கிளர்ச்சி நடந்துவந்திருக்கிறது. முற்காலத்தில், அவையெல்லாம் சிறிய ராஜ்யங்களாய்ச் சேர்க்கையின்றிச் சிதறிக்கிடந்தன. ஆனால் இப்போதோ அவை ஒற்றுமைப்பட்டுத் திரண்டு பலமுடைய தனித்தனி முழுராஜ்யங்களாகி விட்டன.

நான் வாசித்த அளவில், 'உண்மையான தோஷக்ஞர்' (candid critics) அடிக்கடி நம்மைப்பற்றிக் குறைகூறுவதென்னவென்றால், நாம் பலபிரிவுபட்டவராயும் தேசஒற்றுமையில்லாதவராயும் இருப்பதால், தேசத்தின் பொதுநன்மைக்குக் கூடியுழைக்கும் விசாலமனமற்றவராயிருக்கிறோம் என்பதே. அப்பேர்ப்பட்டகுறை நம்மிடமிருப்பது வாஸ்தவமானால் நாம் தேசாபிமானத்தையும் புத்தியையும் கொண்டுசெலுத்தி ஐக்கியப்பட்டுக் கூடியுழைப்பதற்கான முறைகளுக்கு அடிப்போட்டுவரவேண்டியது நமது கடமையாகும். தேசமுழுவதும், யாவரும் ஒருவரையொருவர் அறிந்து பேசிக்கொள்வதற்கு ஒரு பாஷையை ஏற்படுத்துவதோடுகூட தேசஐக்கியம் பலப்படுவதற்கான போதனையையும் புகட்டி வரவேண்டும்.

## சாஸ்திரீய முறைகளின் தேர்ச்சி.

ஐரோப்பாவில் 150-௵ காலத்துக்குள்ளேயே முற்றுப்பெற்றிருக்கும் 'சாஸ்திரசித்தி'யைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அவ்வித 'சாஸ்திர விநத்தி'ச்சரிதத்தை நோக்குங்கால் அதிக ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. மேற்கூறிய காலவளவுக்குள், ரெயில்வேக்களும் புகைக்கப்பல்களும் மின்சாரத் தந்திகளும் தீப்பெட்டிகளும் ஆவியினால் ஏற்றப்படும் காந்தி விளக்குகளும் மின்சாரத்தின் ஒவ்வோர் உபயோக முறையறிவும்—பேசும் வாத்தியமும்(Phonograph,) ரான்ஜன் கிரணங்களும் (Rontgen rays,) சப்த வர்ணப்பிரிவு முறைகளும் (Spectrum analysis,) தேர்ச்சியடைந்த ரசாயண சாஸ்திரமும், வஸ்துவின் அணுவிதிகளும் (Laws of molecular constitution of matter,) சக்தி பரிபாலன விதியும்(conservation of matter) வியாதிகள் புழுஅணுமூலமாகும் என்ற ஐதீகமும் (Germ theroy of disease) ஆகிய அநேக முக்கியமான சாஸ்திரத் துறைகளில் விசேஷமான தேர்ச்சியடைந்திருக்கிறார்கள்.

## இந்தியா பின் வாங்கியிருத்தல்.

நண்பர்களே! இந்தியா மேற்கூறிய துறைகளில் அதிக அபிவிருத்தியடையவில்லையென்பதைக் கவனிக்க, நமக்கு வெட்கத்தையும் துக்கத்தையும் கொடுக்கவில்லையா? "இந்தியா தேசத்தார் மனத்தளர்ச்சியுற்றதனால், அவர்கள் திரும்பத்திரும்பப் புராதன எண்ணங்களையும் ஆசாரங்களையும் பின்பற்றி வருகிறார்களேயொழிய, நவீன நாகரிகமுறைகளில் தேர்ச்சி சிறிதும் பெறக்கூடவில்லை" யென்று ஓர் ஆசிரியர் நம்மை இகழ்ந்து கூறிய மொழிகள் வாஸ்தவந்தானா? நம் தேசத்தாரது புத்திதீக்ஷண்யம் தளர்ந்துவிட்டது என்று என்னால் நம்பமுடியாது. நம் தேசத்தார் ஊக்கங்கொண்டால் 'லோக ஞானபிவிருத்தி' விஷயமாய் எவ்வளவோ நன்மை செய்யலாம். வெகுகாலத்திற்கு முன்னிருந்த நமது மகான்கள், தத்துவ சாஸ்திரத் தேர்ச்சியிலும், பாஷா ஞானப்பயிற்சியிலும் எவ்வளவோ முதன்மை பெற்று, அத்துறைகளில் உலக முழுவதுக்கும் ஞானத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்ற நியாயமான கௌரவமும் பெருமையும் நமக்கு உண்டன்றோ? ஆனால் அக்காலத்தில் நாம் எவ்வளவு புத்தி தீக்ஷண்யத்தில் முதன்மை பெற்றிருந்தோமோ அதைத் திருப்பப்பெற்றால்தான் நாம் அப்படிப் பெருமை பாராட்டலாம். மேனாட்டார் ஞானபிவிருத்தியை மேன்மேலும் நாடிவருகிறார்கள். ஆனால் நம் தேசத்தாரோ, ஆராயாதே, தொன்றுதொட்டுவந்த முறைகளைக் குருட்டுத்தனமாய்ப் பின்பற்றியும், மேல் நோக்கிய முறையைக் கவனிக்காமலும், மேனாட்டாரைப் போல மனோதிடமும் புத்தி தீக்ஷண்யமும் உடைய ஆவலற்றவராயும், 'கிணற்றுத் தவளை'களாயும் இருந்துவருகிறார்கள். நான் 'மாத்யூ ஆர்னால்ட்' கவிஞர் பாடிய நேர்த்தியான சில அடிகளைச் சொல்லி முடிக்கிறேன். அதன் தாத்பரியம் பின்வருமாறு:—

'கீழ்த்தேசத்து நாகரிகமானது, மேனாட்டு நாகரிகமாகிய சூறைக்காற்று சுழன்று வீசித் தன்னை அழிக்க முயல, அதை அலக்ஷியத்துடன் பொறுத்துக்கொள்வதுபோல் தலைகுனியப்பெற்றிருந்தது. ஆனால், அது, சூறைக்காற்றுத் தீர்ந்து ஒழியப்பெற்றபின், எப்பொழு

தும்போலவே தியானத்துறையில் தன் சிந்தையைச் செலுத்திவரலாயிற்று."

## மேனாட்டு முறைகளில் விலக்கற்பாலன.

நண்பர்களே! நான் மேனாட்டுச்சுற்றுப்பிரயாணங்களிலிருந்து திரும்பிவந்திருக்கிறபடியால், மேனாட்டையே சிலாகித்துக் கூறுகிறேன் என்றாவது, இந்தியாவுக்கு இனிமேல் ஒருகாலத்திலும் க்ஷேம விமோசனமில்லவேயில்லையென்று, என் நம்பிக்கையை ஒழித்துவிட்டேன் என்றாவது எண்ணிவிடாதேயுங்கள். விஷயங்களை நடுநிலையாய் ஆராய்பவன் எவனும் மேனாட்டு நாகரீகத்திலும் அநேக குறைவுகளிருக்கின்றன என்பதை ஒத்துக்கொள்வான். பெரியகைத்தொழிற் பட்டணங்களில் ஜனப்பெருக்கு மிகுதியால் உண்டாகும் கெடுதிகள் பலவுள. அக்கேடுகள் அந்நாட்டாருக்குப் பிற்காலத்தில் அழுந்தியுறைக்கும் என்பதில் ஐயமில்லை. வாஸ்தவமாகவே, அவை அவர்களது க்ஷேமத்துக்கு ஹானிகரமாகும். மேனாட்டில் ராஜாங்க முறையிலும் ஆசாரவழியிலும், தேசசவுக்கியத்துறையிலும் இன்னும் அநேகவிஷயங்கள் நிர்த்தாரணம் செய்யப்படவில்லை. தொழிலாளிகளுக்குள் (Labourers) அடிப்பட்ட ஒற்றுமையில்லை. மேனாட்டில் எங்கும் பொருளாசையே பெருத்து வருகிறது. அந்நாடெங்கும் ஜனங்கள் வீண் ஆடம்பரத்திலும், பணப்பூஜையிலும் ஆவலுள்ளவராயிருப்பதால், சாதாரணமும் சௌகரியமும் ஆடம்பரமுமற்ற முறைகளை யநுஷ்டித்துவரும் பழக்கம் அங்கேயில்லை. ஆனால் நம் தேசத்தாரோ, மேற்கூறிய சாதாரண சௌகரிய வழிகளையே பின்பற்றிவருகிறார்கள்.

இந்தியாவானது நீதிசாஸ்திர முறையில் கண்டிருப்பதற்கேற்க, சுலபமான சௌகரியஆசாரவழியை நாடியும், மேனாட்டுச்சிறந்த புத்திமான்களாலும் சாத்தியமாகாத பெரும்விஷயங்களை நிர்த்தாரணம் செய்துதந்தும், தற்கால சாஸ்திரரீதியான செல்வஅபிவிருத்திமுறையைத் தனக்கு உரிமையாக்கிக்கொள்ளவும், செல்வப்பெருக்கால் சண்மூடப்பட்டுப் போகாமல் சாதாரணஆடம்பரமற்றஆசாரவழியையே எப்பொழுதும் பின்பற்றிவருவதுமே, அது தன் நன்மையும் உலக நன்மையுமாகக்கருதிச் செய்யவேண்டிய கடமைகளாகும். அதாவது மேனாட்டாருக்குத் தன் நீதிசாஸ்திரதத்துவத்தை உபதேசிக்கவும், அவர்களிடமிருந்து சடசாஸ்திரத்தைத் தான் கற்று உபயோகித்துக்கொள்ளவும் வேண்டுவதேயாம்.

முற்றும்.

உ

# பெரிய புராண அரும்பத விளக்கம்.

## கண்ணப்ப நாயனூர் புராணம்.

(உருசு-ம்-பக்கத்தொடர்ச்சி)

(ருக) வரைச் சூராட்டி-மலையிலுள்ள தெய்வபாவேசப்பட்டவள்.

(ருஉ) சிறப்புப் பொருந்திய கருமை விராய நறியகுடுமியையும் வாசக்கண்ணியையுமுடைய நீலரத்தினமலை யொன்று வந்தாற்போல.

(ருங.) உடைதோல் - தோலுடைய பரிசை. (ருச) மறுமை கொண்டு - மறுமையைக் கைக்கொண்டு; மறுமையைப் பொருந்தியென்றுமாம். சிந்தையைச் சிவங்கொள்ளும்படி நின்ற.

(ருரு) நம்முடைய குலத்துள்ள வேடராகிய சுற்றத்தை நான் கைக் கொண்டு காத்த தன்மையின் நன்மையையே செய்து பகை முனையிலயற்புலங்களைக் கவர்ந்துகொண்ட திண்ணிய வில்லின் வள நீங்காத சிறப்போடு வாழ்வாய்; கொடியதுணிவையுடைய வேட்டைகளுமுனக்கு வாய்க்குப்; நீதாமதியாது விரைந்து வேட்டையாடற்கு. இயல்பு-தனக்குரிய வியல்பு.

(ருசு) தங்கிய இருள்புலரும் விடியற்காலத்தில் விரிந்த விற்சாலையிற் பொலிந்த வில்லின் வலிய வேட்டைக் கோலத்தைக்கொள்ள அலங்கரிக்கின்ற கைத்தொழில் வல்லுநரோடு பொலிந்து புகுந்தார்.

(ருஎ) நெறிப்பைக் கொண்ட சுருட் குஞ்சியானது, சாய்ந்தும் நிமிர்ந்தும் பொலிய, தளிரைக் கொண்டமாலைக்கிடையே கூட்டமாகியவொளிபொருந்திய மயிற்பீலியைச் சேர்த்தி, வாசனை பொருந்திய பிணைந்த முல்லை மாலையின் மீது குறிஞ்சி மலரையும் வெட்சி மலரையும் நெருங்கிய வண்டின் கூட்டம் விழும்படி பின்னுறச் செருகி.

(ருஅ) முன்னெற்றியின் மீது மயிலிறகினடிக்குருத்திற் கிடையே வைத்த குன்றிமணியோடு முறுக்கப்பட்ட மயிர்க்கற்றை பொ

ருந்த அணிந்து மின்னலைப் போல விளங்குகின்ற சங்காலாய வெள்ளிய தோடு காதிற் பொருந்திப் பக்கத்தே நின்றவை பூரணசந்திரனைப் போலிருக்க.

(௫௯) கழுத்தின்கண் வெள்ளிய சோகியாகிய காந்தி பொருந்திய மாலையைப் பொருந்த அணிந்து, சங்குமணியோடு பலரத்தினங்களைக் கோத்து இடையே பாலசந்திரனைப் போல்வனவாகிய பன்றிக் கொம்புகள் தூங்க, புலியின் வலிய தோலாகிய தட்டை வடிவச் செயல் பொலிந்த சன்னவீரமென்னுமாபரணம் விளங்க. தண்டை மெலித்தல் விகாரம்.

(௬0) மார்பிற்சிறிய யானைத்தந்தத்தாலாய மணிகளின் திரண்ட மாலை தூங்க, மாலையாற் பொலிந்த புயங்களிலுள்ள வாகுவலயங்கள் தழைத்துப் பிரகாசிக்க, பொருந்திய வொளிபொலிந்த கங்கணம் மேலே விளங்கிய முன்கையில் மேகத்தைப் போலப் பாணத்தைச் சொரிகின்ற வில்லின் சிறிய நாணைச் சுண்டுகின்ற கைத்தோற்கட்டியை இட்டு.

(௬௧) அரையிலே மயிற்பீலி பொருந்திய புலித் தோலாடையின் மீது கடற்றிரையிற் பொருந்துகின்ற வெண்மையாகிய சோகிகளை நிரைத்து விளிம்பு சேர்த்தி, வரிசையாகப் பொலிகின்ற உடையாகிய தோலின்மீதே வாளின் புறத்தைச் சூழ்ந்த வாசனை பொருந்திய துவராற் பதப்படுத்தப்பட்ட வார்க்கட்டைச் சூழ்ந்து அமைத்துக் கட்டி. சரணம்-மயிற்பீலி.

(௬௨) வீரக்கழலைக் காலில் விளங்கும்படி யணிந்து, பாதத்திற் பொருந்த இட்ட நீண்ட செருப்பானது, விருப்பத்தோடு வாய்த்திருக்கும்படி பாரமாகிய பெரிய வில்லைப் பிரதக்ஷணஞ்செய்து நமஸ்கரித்துத் திண்ணனார் பொருந்த அழகிய பாதத்தை மடித்து நாணேற்றி வியந்து தாங்கி. தொடு நீடு செருப்பு பாதஞ்சேர எனக்கூட்டுக.

(௬௩) அப்பொழுது அச்சிற்றூரிற்பொருந்திய இடர் நீங்க, மிக உயர்ச்சி பொருந்திய பெரிய கருமுகிலைப்போலத் துன்னொன்றொலிக்க, தறுகண்மையையுடைய கோபமிகுகின்ற விலங்குகள் விலகியோட, சிவந்த கையிற்றடவிச்சிறிய நாணில் ஓசை கொண்டார்.

(௬௪) வில் வேட்டுவக்கூட்டங்களுடைய உடுக்கைகள் பொருந்தி ஒலிக்கும் முன்றில்களிலே சொல்லப்படும் பலவகைப்பட்ட வாழ்த்துத் திக்குகடோறும நெருங்கி மிக, கரிய இடபேற்றைப் போல்பவராகிய திண்ணனார், பலவகைப் பட்டவேற்றுமையான பாணங்களை யாராய்ந்து நின்றார்.

(௬௫) கருங்குவளையாகிய கூட்டமான புஷ்பங்களைப் போலப்படர்ந்த சோதியையுடைய திண்ணனாருக்கு முன்வந்தாள். சுரு-தேவரூண். (௪-ம் வரி)காட்டிற் பலியிடுந் தேவராட்டி.

(௬௬) சேடை-அக்ஷதை. நன்றும் பெரிது - மிகப்பெரிதுமென உம்மையையமாறுக;சாரியையென்றலுமாம்.

(௬௯) வலியசங்கிலியிற் கட்டிய கயிற்றை வலிமை பொருந்தியகையிலே வீரர்கள்பிடிக்க,விசயலக்குமியினது வேடர்களுடைய வில்லின் மீதே பொருந்துகின்ற கால்களானவை சென்று திரும்பு மாறுபோல்வனவாகிய சிவந்தநாப்பொருந்திய வாயையுடையனவாய் ஒன்றோடொன்று நேர் படாமலோடுகின்ற நாய்கள் பக்கங்களினெல்லாமுள்ளன. போல்வ என்னும் பெயரெச்சம் நாஎன்னும் பெயர் கொண்டது. நாயோடு முடித்தல் சிறப்பின்று.

(௭௦) போராகிய வலையையுடைய விற்றொழிலைக் காட்டினிடத்தேசெய்யவென்று (வைத்து) அந்தப்பந்தித்த பாசபந்தத்தை அறுக்கச்செல்கின்ற திண்ணனாருக்கு முன்னே, முகிலைவலைப்படுத்திய மலையிலுங்காட்டிலுமுள்ள மிருகங்களை வளைக்க, நீண்டவார் வலைகளின் பகுப்புக்களைச் சுமந்து வந்த வேடர்கள் முந்திச் சென்றார்கள்.

(௭௧) பெரிய வேதகூட்டங்கள் சமீபித்துத் தேடஎன்றுந் தூரிக்கின்ற அந்தக்குளிர்ந்த நிலா அரும்புகின்ற கொன்றைமாலை தங்குகின்ற சடையையுடைய சிவபிரானைக் கண்ணில் மிகும் பார்வையொன்றையே கொண்டு தரிசிக்கும் அன்பராகிய திண்ணனாருக்கு முன்னே, அளவிறந்த பார்வைமிருகங்களைக் கொண்டு வேடர்கள் எப்பக்கங்களினுஞ் சென்றனர்.

(எஉ) கொட்டப்படவும். பெருமைபொருந்திய கையிற்றட்டுஞ் சிறந்த ஓசை செல்லவும். காட்டைத் தம்முள்ளடக்கிக்கொண்டெழுந்த வேடர்கள் இருமருங்கினும் வளைந்து சென்றனர். மிருதியைக் கொண்டெழுந்த வேடர் என்றுமாம். வேடு-பண்பியைப் பண்பாகக் கூறிய வழுவமைதி.

(எங). நெருங்கிய விருக்ஷஜாலங்கள் மிகுந்த காட்டைச் சேரநேரே வருகின்ற கரிய, விற்பொருந்திய விசாலித்தகையையும் மானத்தையுமுடைய வேட்டுவராது சேனைகள், கரையோடு பொரும் விசாலமாகிய திரையையுடைய சமுத்திரப் பரப்பின்கட் புகும் பெருமை பொருந்திய கரியதிரைகள் மிகுகின்ற காளிந்தி நதியை யொத்தன.

(எச) தென்றிசைப் பொருப்பு-தெக்ஷிணகைலாசமாகிய திருக்காளத்தி. சுவடுகாரணமாக. துன்றி நின்றவென்று ஒற்றர் சொல்ல.

(இன்னும் வரும்)

ஜி. சதாசிவம் பிள்ளை.

---

# பழையனூர் நீலிகதை.

"துஞ்ச வருவாரும் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரு முனைநட்பாய்
வஞ்சம் படுத்தொருத்தி வாணாள்கொள்ளும் வகைகேட்
டஞ்சும் பழையனூர் ஆலங்காட்டெம் மடிகளே."

எனத் திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரத்தும்,

"மாறுகொடு பழையனூர் நீலி செய்த
வஞ்சனையால் வணிகனுயி ரிழப்பத் தாங்கள்
கூறியசொற் பிழையாது துணிந்து செந்தீக்
குழியிலெழு பதுபேரு முழுகிக் கங்கை
யாறணிசெஞ் சடைத்திருவா லங்காட் டப்ப
னண்டமுற நிமிர்ந்தாடு மடியின் கீழ்மெய்ப்
பேறுபெறும் வேளாளர் பெருமை யெம்மாற்
பிரித்தளவிட் டிவளவெனப் பேச லாமோ."

எனச் சேக்கிழார் நாயனார் புராணத்தும் பிறவிடங்களிலும் பழையனூர் நீலியின் கதையொன்று கூறப்பட்டிருப்பது பலரும் தெரிந்திருத்தல்கூடும். அக்கதையாவது :—

"நீலியென்பவள் பழையனூரிலிருந்த ஒரு வணிகன் மனைவி. இவள் விவாகமாகிச் சிறிதுகாலத்தில் இறந்து திருவாலங்காட்டிலே பேயாய்த் திரிவாளாயினாள். ஒருநாள் அவளுடைய நாயகன் அக்காட்டுவழியே தனித்துச்சென்றபோது இந்நீலிப்பேய் அவனுடைய இரண்டாம் மனைவியைப்போல வடிவங்கொண்டு ஒரு கள்ளிக்கட்டையைப் பிள்ளையாக்கி மருங்கிலே தாங்கிக்கொண்டு அவனைத்தொடர, அவன் அவ்வடிவத்தைப் பேயெனநிச்சயித்து அப்பேயினது வஞ்சமொழிகளுக்கிணங்காதோடினான். பேயும் "இதுமுறையோ! இதுமுறையோ! என்னைக் காட்டில்விடுத்து அகலக்கருதினீரே" என்றழுதுகொண்டு தொடர்ந்து காஞ்சிபுரத்தையடைந்து, அங்கே அம்பலத்திற்கூடியிருந்த வேளாளரிடத்துச் சென்று தன்வழக்கைச் சொல்லிற்று. அம்பலத்துவேளாளர் இருவர்வழக்கையுங்கேட்டுப் பேயைப்பார்த்து, நீ கூறுவதற்குச் சாக்ஷியாதென்றுவினவ, பேய், இப்பிள்ளையை விடுகின்றேன், அஃது அப்பாவென்றழைத்துத் தந்தைமடிமீதேறுதோ பாருங்கள் என்றுகூறிவிடுப்ப, அப்பிள்ளை அவ்வாறுசெய்ய, வணிகன், இது பேய்க்கூத்தென்றான். அதுகேட்டவேளாளர் அஃதுண்மையானால் நாங்கள் பிணையாவோம். நீயும் இவளுமாக இவ்வறையினுட்போய்ச் சிறிதுநேரம் பேசிவாருங்கள் என்றுசொல்ல வணிகன் அவ்வுரைமறுக்கவியலாதவனாய் அறையினுட் செல்லப் பேயுந்தொடர்ந்துள்ளே புகுந்து கதவடைத்து அவனுயிரைப் பருகி மறைந்தது. வேளாளர் எழுபதின்மரும் கதவைத்திறந்துபார்த்துத் தம்மாலிறந்தவணிகன் பொருட்டுத் தாமுந் தீப்பாய்ந்துயிர்விடுத்தார்கள்." என்பர்.

இதே செய்தி தொண்டைமண்டலசதகத்திலும்,

"இன்னும் புகழ்நிற்க ஓர்பழிக் காமற் றெழுபதின்மர்
துன்னுந் தழல்புக் கொளித்ததெல் லாஞ்சுரு திப்பொருளா
யுன்னும் புரிசைத் திருவாலங் காட்டி னுரைபதிக
மன்னுந் தமிழில் வகுத்ததன் றோதொண்டை மண்டலமே.

எனக்கூறப்பட்டிருக்கின்றது.

இனி, இவ்வேளாளர் எழுபதின்மரும் தீப்பாய்ந்த பெரும்புகழ் அக்காலத்துத் தமிழ்மக்களெல்லாரையும் வியப்புறுத்தியதுபோல வே, சேரர் சோழர் பாண்டியர்க்கும் அதிசய மூட்டியது. அவர்கள் மூவரும் அத்தீக்குழியை நேரிற் கண்டு மனமுருகி அவ்வேளாளர் பெருமையை ஒவ்வொரு வெண்பாக்களாற் புகழ்வாராயினர். தமிழ்நாவலர்சரிதையில்,

"பழையனூரார் பழிதீர்த்த தீக்குழி அவியாதெரிய மூவேந்தரும் வந்துபார்த்துப் பாடியவை" என்னுந்தலைப்பின்கீழ் மூன்று இனிய வெண்பாக்கள் இவ்விஷயமாகக் காணப்படுகின்றன. அவை வருமாறு :—

"யாவரே காராளர் யாவ ரிணையாவார்
நாவலோ நாவலோ நாவலோ—கோவைப்
பொருப்பா லமைத்தார்க்குப் போதுமே யுண்மை
நெருப்பா லமைத்தார்க்கு நேர்."—இது சேரன் பாடியது.

"எல்லை பலகடந்திட் டெங்கும் புகழ்பூத்துத்
தொல்லை மனுக்காகத் தோன்றிற்றே—கொல்லை
வழியிலொரு பேய்சின்ற வஞ்சனையாற் செய்த
குழியிலெழு செந்தீக் கொழுந்த."—இது சோழன் பாடியது.

"பிழைத்தாரோ காராளர் பேய்மகள்சொற் கேட்டுப்
பிழைத்தார்க ளல்லர்பிழை தீர்ந்தார்—பிழைத்தார்கள்
எல்லாருங் காண எரியகத்தே மூழ்கினர்
எல்லாரு மின்று முளர்."—இது பாண்டியன் பாடியது.

இப்பாடல்கள், வேளாளர் சத்தியத்தைக் காத்ததுபற்றி, எவ்வளவு உருக்கங்காட்டுகின்றன என்பது அறிந்து மகிழத்தக்கது.

பத்திராசிரியர்.

---

# விக்ரமாப்தம்.

கல்யாணபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த மேலைச் சளுக்கியவரசரில் சோமேசுவரனின் புதல்வர் சோமேசுவரன் II, விக்ரமாதித்யன் என்னுமிருவரில் இளையோனாகிய விக்ரமாதித்யனுக்குப் பலபிரதி நாமங்களுள. அவையாவன:— விக்ரமாங்கன், விக்ரமாங்கதேவன், விக்ரமலாஞ்சனன், விக்ரமாதித்யதேவன், விக்ரமார்க்கன், பர்மாடி கலிவிக்ரமன் முதலியன. இவன் தந்தை யிறந்தகொஞ்சக்காலத்தின் பின்னர் தமையனு லிராச்சியத்தினின்றுந் துரத்தப்பட்டான். இவன் தந்தை ஆகவமல்லன் அல்லது சோமேசுவரன் I என்பவனைக் கொப்பையில் வென்றவன், பரகேசரிவர்மன், ராஜேந்திரதேவன் அல்லது ராஜேந்திர சோழ தேவனெனப்பட்ட சோழவரசன். இவன் மகள் மதுராந்தகியை மணந்தவன் ராஜேந்திர சோழன், குலோத்துங்கசோழதேவன், குலோத்துங்க தேவன், ராஜநாராயணன் எனப்பல பெயர் கொண்ட அபயன். இவனே கலிங்கத்துப் பரணிகொண்டவன். இவன் தந்தையாவான் கீழைச்சளுக்கியவரசன் இராஜராஜன் I அல்லது விஷ்ணுவர்தனன் Viii. சோழவரையன் மகள் அம்மங்கதேவியை மணந்து சோழவரசுரிமையைத் தன் மகனுக்குக் கொண்டவன்.

விக்ரமன் தமையனால் துரத்துண்டு சிலசேனையைச் சேர்த்துப் பலவரசரை ஜெயித்துச் சோழவரசன் மேலும் படையெடுத்தான். அக்காலத்துச் சோழவரசன் அபயன் தன் மகளை இவ்விக்ரமனுக்கு விவாகஞ்செய்வித்து அவனோடு உறவு கொண்டனனென்பதாகவும்; இவ்வபயன் சிற்றப்பன் வேங்கையாதிபதியாகிய விஜயாதித்யனுக்குப்பின் தன் இளைய குமாரன் ராஜராஜனை வேங்கைதேசத்ததிபனாக்கினன் எனவும் தெரிகிறது.

அபயனிறந்தபின் இவ்விராஜராஜனே சோழதேசத்தாதிபத்யம் கவர்வான் தன தமையனாகிய விக்ரமசோழனை யெதிர்க்க, விக்ரமசோழற்குத் துணையாகச் சளுக்கிய விக்ரமார்க்கன் ராஜராஜனைத்தோற்கடித்து விக்ரமசோழனை சோழமண்டலாதிபதியாய் நிறுவினனென்பதாகவும் தெரிவதுடன் தன் தமயன் சோமேசுவரனைச் சிறையில் வைத்துத் தான் கி. பி. 1076 ஆம் ஆண்டிற் சிம்மாசனமேறி அவ்வாண்டிலே தன் பெயரால் "விக்ரமாப்தம்" என்றோர் அப்தமேற்படுத்திப்பின்னருஞ் சோழவரசன் முதலிய பலவரசரை வென்று பெரும் புகழ் படைத்தானெனவுந் தெரிகிறது. பெரும்புகழ் படைத்ததுடன் விகரமாப்தமும் பெருவழக்காயிருந்ததெனவுந் தோன்றுகிறது. இவ்விக்ரமன் இறந்தது விக்ரமாப்தம் 51. ஆகவே கம்பர் காலத்திலிறந்தானென்பது விளங்கும். கம்பர் காலத்துள்ளானாயின், இவ்வாப்தம் சோழமண்டலத்தில் வழங்கியதாவென அறியவாற்றலில்லாது செந்தமிழ்ப் பத்திரிகைவாயிலாகச் சான்றோரைத் தாழ்ந்து வினவுகின்றேனை. கருணை கூர்ந்து விடை பகர்தல் கற்றோர் கடனே.

இரங்கூன்,
21—3—07.

ஞானதிக்கமச்சாது.

# புத்தகக்குறிப்பு.

**ஸ்ரீ கம்பராமாயணம்—சுந்தரகாண்டம்:**—ஸ்ரீரங்கத்தில் ஸ்தாபிக்கப்பெற்றுள்ள ஸ்ரீ வாணீவிலாச முத்திராசாலையிற் பதிப்பிக்கப்பட்ட இராமாவதார-சுந்தரகாண்டப்பிரதி யொன்று, சமீபத்தில் கிடைக்கப்பெற்றோம். இஃது, அவ்வச்சுக்கூடத்தலைவர் ஸ்ரீமாந்-டி. கே. பாலசுப்பிரமணிய ஐயரவர்கள் ஆதரவாலும் ஸ்ரீமத்-பி. ஆர். கிருஷ்ணமாசாரியரவர்கள் முயற்சியாலும் வெளிவந்தது. இதற்கு முன் பலர் பல்லிடங்களில் இராமாயணத்தைப் பதிப்பித்திருப்பினும், அவற்றினும், இப்பதிப்பு எல்லாவிதத்தாலும் மேம்பட்டிருத்தற்கு மகிழ்கின்றோம். சுந்தரகாண்டமூலத்தை பலஏட்டுப்பிரதிகள்வைத்து ஆராய்ந்து, சுத்தபாடங்களைக்கண்டு வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது. அவைமுழுமையும் பார்த்துமகிழ அவகாசப்படவில்லையாயினும், யாம்பார்த்த சிற்சில விடங்களில், பதிப்பித்தோர் முயற்சி பாராட்டத் தக்கபடியேயுள்ளது. இராமாயணபாடங்கள் பிறழ்ந்து கிடப்பதை நோக்கும்போது, அந்நூல்விஷயமாக எத்தனைபாடுபடினும் நன்மையும் பெருமையுமேயாகும். ஆசாரியரவர்கள் கொண்ட கம்பராமாயணப்பதிப்பு முயற்சியில், ஏனையோர்சிலரைப்போலாது, மூலத்தையும் சோதித்து வெளியிடத் தொடங்கியிருப்பது புகழ்ச்சிக்குரியதாம். இப்பதிப்பில், மூலத்துடன், அதன் கதைகள் இனிய எளிய நடையில் சுருக்கமாக வரையப்பட்டுமுள்ளன. அந்நூலைக்கற்போர்க்கு, சந்தர்ப்பங்களை எளிதிற்றெரிந்துகொள்வதற்கு இது பேருபகாரமாகும். இதனுடன், இம்முயற்சியை ஊக்கியுதவும் ஸ்ரீமாந்-பாலசுப்பிரமணிய ஐயரவர்களால் இப்பதிப்பைப்பற்றி எழுதப்பட்ட நீண்ட ஆங்கில முகவுரையும் சேர்க்கப்பட்டுள்ளது. இஃது, ஆங்கிலவுலகத்திற்குக் கம்பர்பெருமையை விளக்கி மகிழ்விக்கத்தக்கதென்பதில் ஐயமில்லை. இவையன்றி, அசோகவனத்தில் அரக்கியராற் சூழப்பட்டுப் பிராட்டியிருக்கும் நிலையைக்குறிக்கும் அழகியபடமும், அங்குலீயகப்ரதானபடமும் இப்பதிப்பில் அமைக்கப்பட்டிருக்கின்றன. சுந்தரகாண்டத்துக்கு செய்யுளகராதி இட்டிருப்பதும் விரும்பத்தக்கதேயாம். இவைகளெல்லாவற்றோடு காகிதமும் அச்சும் கட்டடமுங் கண்கவர்வனப்பினவாயிருக்கின்றன. இவை அவ்வச்சுக்கூடத்தின் இயற்கைமாட்சியேயாம். தமிழில் முதன்மைபெற்ற நூல்களில் முக்கியமானதும் மகாகவிப்ரணீதமுமான இராமாயணத்தை இன்னும் எத்தனைவிதமாக அலங்கரித்தாலும் விரும்பத்தக்கதேயன்றோ. ஆங்கில கவியாகிய ஷேக்ஸ்பியரது நூல்களை அவர் நாட்டார் என்னபாடுபடுத்துகின்றனர் பாருங்கள். ஐயரவர்களும், ஆசாரியரவர்களும், சுந்தரகாண்டத்தை முதலாகக்கொண்டு, கையடக்கமான அழகியமாதிரிகையில் கம்பராமாயணத்தை வெளியிடத்தொடங்கியிருத்தலால், அவர்கள்மேற்கொண்ட முயற்சி மிக்கசிறப்புடன் இனிதுமுடியுமென்றே நம்புகிறோம்.

பத்திராசிரியர்.